
அக் - நவம்பர்
1969

# பூச்செண்டு

30 காசு




www.thamizham.net - Free E Books No TM 14720

● காதுக்கினிய கானத்தையும் கண்ணுக்கினிய அழகையும் அளிக்கக் கூடிய ஒரே ரேடியோ

மர்பி

● குறைந்த செலவில் சுலபக் கொள் முதல் திட்டத்தில் மிக உறுதி வாய்ந்த ரேடியோவை விற்பனை செய்து வரும் நாணயமான கம்பெனி.




உலகில் மிகவும் சிறந்தது

மர்பி டிரான்ஸிஸ்டர்

உன்னத ஒலிநயம் சிறந்த அமைப்பு

சுலபக் கொள்முதல் திட்டத்தில்
உங்கள் வீடுகளில் ஒலிக்க வேண்டுமா?

உடனே அணுகவும்.

PHONE:
53075, 51871

சாமுவேல் பேமிலி எய்டு கார்ப்பரேஷன்

H.O. 50A ஜி. எ. ரோடு, தண்டையார்பேட்டை, சென்னை-21.

B.O. 181/2 ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14.


www.thamizham.net - Free E Books No TM 14720

தமிழக அளவில் மாணவர்களால் மாணவர்களுக்காக
நடத்தப்படும் ஒரே இலட்சியத் திங்களிதழ்

# பூச்செண்டு

19, நெளரோசி வீதி
சென்னை - 31

தனிப்பிரதி 30 காசு ஆண்டு சந்தா ரூ 4/-

செண்டு : 2 அக் - நவம்பர் 1969 பூ : 6

## உங்கள் எதிரொலி

### துணிவு !

○ செப்டம்பர் இதழ் தலையங்கம் மிகவும் நடுவு நிலைமையோடு வரையப்பட்டது கண்டு மிகவும் பூரிக்கிறேன். மாணவர் பத்திரிகையானலும் மாணவர் செய்த தவறையும் சுட்டிக் காட்டிய துணிவுக்கு எனது பாராட்டுக்கள்.

வே. பாஸ்கரன்,
அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

### தேவைதானு?

○ "ராகிங் அனுபவங்கள்"... போன்ற பேட்டிகளை பல பத்திரிகைகளும் திரும்பத் திரும்ப வெளியிடும் நிலையில், புதுமை ஏடு பூச்செண்டிலும் இந்தப் பாணி தேவை தானு?

இரா. நடராஜன்
திருக்கழுகுன்றம்

### உண்மை!

○ "பூச்செண்டு" என்ற தலைப்பில் திரு. செயினுலாபுதீன் எழுதிய கதை என் நெஞ்சைத் தொட்டது. கதையின் முடிவில் கண்கலங்கினேன்! உயர்வு நவிற்சியல்ல உண்மை!

த. கிருஷ்ணமூர்த்தி
மதுரை-6

www.thamizham.net - Free E Books No TM 14720

## மு(ர)ன்னேறவில்லை!

○ "ரீத்தா" சினிமா விமர்சனம் எழுதுவதோடு நிற்கட்டும். அவர் குத்திக்காட்டிய அளவுக்கு நாம் ஒன்றும் பின் தங்கி விடவில்லை. முன்னேற்றம் என்பது விஞ்ஞான வளர்ச்சியில் மட்டும் இல்லை.

இல. இராமன்
சென்னை - 23

## சொந்த அனுபவமோ?

○ "அறியாயோ...?" என்ற கவிதை எழுதியவர் தனது அனுபவங்களை எழுதியிருப்பாரோ என ஐயுறத்தோன்றுகிறது.

து. காசிநாதன்
நெல்லை-1

## மாணவர் பங்கு?

○ அரசியலில் பங்கு கொள்ள ஒரு அரசியற் கட்சியினை நாடுவது ஒன்று தான் முடிவான வழியல்ல' என்று திரு. இளங்கோ வற்புறுத்திய கருத்து, இன்று அரசியல் கிணற்றில் மூழ்கிக் கிடக்கும் மாணவ உள்ளங்களை கட்டாயம் சிந்திக்க வைக்கும்.

—கமலக்கண்ணன்
ஈரோடு

---

❋ அடுத்த இதழ் முதல் சிறந்த கடிதத்திற்கு தமிழக அரசு பரிசுச் சீட்டு பரிசளிக்கப்படும்.

---

## பூச்செண்டு ஏன் தாமதம்?

தொடர்ந்து பல மாதங்களாக மாதத்தின் மத்தியில் பூச்செண்டு வருவதைத் தவிர்த்து மாதத்தின் முதல் நாள் இதழ்கள் கிடைக்க வேண்டுமென்று தொடர்ந்து ஏராளமான வாசகர்களும், விற்பனையாளர்களும் கேட்டுள்ளமையால் இந்த இதழை சற்று தாமதப்படுத்தி சற்று அதிகப் பக்கங்களுடன் அக்-நவம்பர் இதழாக வெளிக் கொணர்கிறோம்! சந்தாதாரர்களுக்கு எண்ணிக்கையிட்டு 12 இதழ்கள் அனுப்பப்படுவதால், ஒரு இதழ் குறைந்து விட்டதாய் யாரும் எண்ணிவிட வேண்டாம்.

---

www.thamizham.net - Free E Books No TM 14720

எல்லா விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளும் ஒரே முகவரி: (தனிப் பட்ட பெயர்களுக்கு எழுத வேண்டாம்)

ஆசிரியர் குழு,
"பூச்செண்டு"
19, நௌரோசி வீதி,
சென்னை-31

## ஆசிரியர் குழு

[பதிப்பாசிரியர்: பேராசிரியர் திரு. சு. இராசேந்திரன், (எம். ஏ.)

திரு. இ. ஜே. சுந்தர் (I எம். ஏ.) பச்சையப்பன் கல்லூரி

திரு. வில்லியம் பெர்னாண்டஸ், சி.டி. (ஏ. எம். ஐ. இ.)

திரு. ஈ. எஸ். மெர்வின் (III பி. ஏ.)

திரு. அ. மா. சீ. செயினுல்லாபுதீன் (III பி. ஏ) பச்சையப்பன் கல்லூரி

திரு. ந. ஆ. செயவேலன் (IV எம். பி., பி. எஸ்.) சென்னை மருத்துவக் கல்லூரி

## துணையாசிரியர்:

திரு. இ. துரைசாமி (II எம். பி. பி. எஸ்.) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி

புகைப்படங்கள்; திரு. யோகானந் (பி. எஸ்ஸி.) [சினித் ஸ்டூடியோ]

ஓவியக்குழு: திரு. துளசிதாஸ் (IV. பி. இ) பொறியியற் கல்லூரி, சென்னை

திரு. டி. வி. பார்தசாரதி பி. எஸ்ஸி.

## செயற் குழு உறுப்பினர்கள்

**திருச்சி;**

திரு. பொ. இரத்தினம் (iii பி.காம்) தேசியக் கல்லூரி

திரு. இளங்கோ ஆ. இரா (ii பி. எஸ். ஸி) பெரியார் கல்லூரி

திரு. க. செல்லப்பன் (iii பி.எஸ்.ஸி) புனித சூசையப்பர் கல்லூரி

திரு. அ. சாகுல் அமீது (iii பி.எஸ்ஸி) ஜமால் முகம்மது கல்லூரி

திரு. எஸ். சி. பாலுராஜன் (ii பி.ஏ) தேசியக் கல்லூரி

திரு. ப. கணபதி (ii பி. காம்) தேசியக் கல்லூரி

**மதுரை:**

திரு. வி. வே. மாலன் (iii இளமருந்தாக்கியல்) மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. வீ. செ. அன்பழகன் (iii இளமருந்தாக்கியல்) மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. கா. பரதன் (ii பி. காம்) மதுரைக் கல்லூரி

www.thamizham.net - Free E Books No TM 14720

திரு. சிவசூரியன் (ii பி. ஏ) மதுரைக் கல்லூரி

திரு. வி. பழனியப்பன் (iii பி. ஏ) தியாகராசர் கல்லூரி

திரு. இராம அங்கணன் (ii பி. ஏ) அமெரிக்கன் கல்லூரி

**சென்னை**

திரு. அர. கல்யாணராமன் (iii பி.ஏ) விவேகானந்தா கல்லூரி

திரு. சனார்த்தனம் (iii பி. ஏ) இலயோலா கல்லூரி

திரு. இராம் மோகன் (ii பி எஸ்.ஸி) சமணக் கல்லூரி

திரு. எம். எஸ். இராமச்சந்திரன் (i பி. ஏ) கிறித்துவக் கல்லூரி

திரு. சி. சுப்பிரமணியன் (ii எல்.எம். இ) இராம கிருஷ்ண மிஷின் தொழிற்கல்வி நிலையம்

திரு. கு. தண்டபாணி (i பி. எஸ்.ஸி) து. கோ. வைணவக் கல்லூரி

திரு. வி. இ. ராஜா தேசிங்கன் (முன்னிலை) இலயோலா கல்லூரி

**சேலம் :**

திரு. ஆர் மாதையன் (முன்னிலை) கந்தசாமி கவுண்டர் கல்லூரி. வேலூர்

திரு. சு. இரவி (iii பி இ) அரசினர் பொறியியற் கல்லூரி

திரு. இல. பிரசன்ன வெங்கடேசன் (iii பி. ஏ.)

**திருநெல்வேலி**

திரு. பா. முத்துசாமி (ii பி.ஏ) தூய சவேரியார் கல்லூரி

திரு அ. ஹரிஹர சுப்பிரமணியன் (iii பி. எஸ்.ஸி) இந்துக் கல்லூரி

திரு. ந. ஆறுமுகம் (iii பி. எஸ்.ஸி இந்துக் கல்லூரி

**தூத்துக்குடி :**

திரு. வே. இரமணன் (iii பி. காம்) வ. உ. சி. கல்லூரி

திரு. இரா. அன்டோர் மச்சாது (iii பி. ஏ) வ. உ. சி. கல்லூரி

**அண்ணாமலை பல்கலைக்கழகம் :**

திரு. இரா. குமணன் (iii பி. ஏ)

திரு. இரத்தின கணேசன், புலவர் இடைநிலை

**பிற இடங்கள் :**

திரு. ராஜாராம் (iii பி.ஏ) தூய நெஞ்சக் கல்லூரி: திருப்பத்தூர்,

திரு. கே. கணேசன் (i பி. காம்) அழகப்பர் கல்லூரி, காரைக்குடி.

திரு, பழ. சிங்காரவேலு (i பி. ஏ) பச்சையப்பன் கல்லூரி, காஞ்சி

திரு. இருதயதாசன் (iii பி. எஸ்.ஸி) இந்துக் கல்லூரி, நாகர்கோயில்

திரு, ப. தமிழினியன், புலவர் நிறைநிலை திருவையாறு

திரு. அ. ஜஹபர் சாதிக் (மின்னியல் இறுதியாண்டு) வலிவலம் தேசிகர் பன் தொழில் நுட்பக்கல்லூரி, நாகூர்

**மகளிர் :**

செல்வி. வி. ஆனந்தி (ii பி. எஸ்ஸி) எஸ். ஐ. டி. கல்லூரி, சென்னை

செல்வி வி. ஆர். வான்மதி (ii பி எஸ்.ஸி) எஸ். ஐ. இ. டி. கல்லூரி, சென்னை

செல்வி. அருணா (i பி.ஏ) அரசினர் மகளிர் கல்லூரி சென்னை

செல்வி. க. கருப்பாயி (iii பி. ஏ. மீனாட்சி கல்லூரி மதுரை

செல்வி. கே. எஸ். கிருஷ்ணவேணி (ii பி. ஏ.) பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் கல்லூரி கோவை

செல்வி. சி. மல்லிகா (ii பி. ஏ.) S.N.C.W. கொல்லம் கேரளம்

**இலங்கை :**

செல்வி. இராதா. (இளங்கலை) மகளிர் கல்லூரி கொழும்பு

---

**உறுப்பினர்கள் இல்லாத கல்லூரிகளிலிருந்து மட்டுமே மாணவர்கள் தேவை. மகளிர் கல்லூரிகளில் ஆர்வமுள்ள மாணவிகள் சேர அழைக்கிறோம்.**

www.thamizham.net - Free E Books No TM 14720



# நூற்றாண்டு விழா நிறைவு பெற...

காந்தி நூற்றாண்டு விழா கண்ணீருக்கிடையே கனிந்துதிர்த்த துயரத்தின் துளிகளுக்கிடையே அமர காந்திஜியை நினைவுறுத்திக் கொள்ள வேண்டிய துர்லபமான நிலையை- நிலைமையை நம் நாடும் இளைஞர் குழாமும் கொண்டுள்ளது என்பதை எண்ணும் போது,

நெருப்பேறி எரித்தாலும் நிமிர்த்தசிரம் தாழ்த்தாத அந்த உத்தமரை- வன்செயல் நடைபெறும் போதெல்லாம் வலிமையுடன், ஆனால் ஆன்மீக முறையில் எதிர்த்து வெற்றி கொண்ட நல்லவரை- பொங்கும் புனலாய் வங்கக் கடல் குமுறியெழும் போன்று தங்கு தடையின்றி சொல்லால் செயலால் நாட்டைத் தூய்மைப் படுத்திய இதயத் தலைவரை என்று காண்போம் என்ற ஏக்கமும்-பீடுகளைந்திட நாடு நலிவுறும் நிலைத் தகர்ந்திடப் பிறிதொரு அண்ணலைக் காணோமே என்ற துன்பமும் இன்றைய இளைய பாரதத்தினரின் நெஞ்சிலெல்லாம் கூரீட்டி பாய்ச்சி நிற்கின்றன.

என்றாலும், அண்ணலின் கொள்கைகளையோ, செயல்முறைத் திட்டங்களையோ சமுதாயம்-குறிப்பாக இளைய சமுதாயம் உணர்ந்தாகத் தெரிய வில்லை. காந்திஜி என்றால் யாரோ ஒரு முனிவர்; துறவி- வேப்பிலையும் ஆட்டுப் பாலும் சாப்பிடச் சொன்ன உலகப் பற்றிறுத்த மனி

www.thamizham.net - Free E Books No TM 14720

தர்- அவரை நம்மால் நெருங்க முடியாது என்ற எண்ணம் இன்றைய தலைமுறையினரிடம் நிறைய பரவியுள்ளது. இதற்கெல்லாம் காரணம்,- நம்மை வழிநடத்திச் சென்றவர்கள் செல்பவர்கள் காந்தியை மறந்தவர்கள் என்று கூறமுடியா விட்டாலும் காந்தியின் கொள்கைகளைத் தமக்கு 'வணிக' மூலதனமாகிக் கொண்டு நடப்பவர்களாக அமைந்து விட்டதும் ஒரு காரணமாகும். என்றாலும், அண்ணலின் அமுத வாக்கினை 'சத்திய சோதனை' முழுமையும் பரவிக் கிடைக்கிறது என்பதை யுணர்ந்து தெளிந்தால் அதுவே மகாத்மாஜியின் நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாடுதலுக்குப் பொருளும் பயனும் உடையதாக அமையும்.

இந்தக் காந்தி நூற்றாண்டு நிறைவு விழாவில், அண்ணலின் புகழ் அவனியெங்கும் புதுப் பொலிவுடன் பரவி, கொள்கைகளின் சக்தியால் கலைகள் கலையப்பட்டு நாடும் வீடும் சிறந்து நல்லறம் சிறக்க 'பூச்செண்டு' தன் பொக்கைவாய் திறந்து தம் வாழ்த்தைச் சமர்ப்பிக்கின்றது.


Phone : 440278

Learn Car Driving
IN

15 Days

MODERATE FEES!
EFFICIENT & EXPERT COACHING!!

BALMAN DRIVING CENTRE
(Opp. Mambalam Rly. Station)
31, RANGANATHAN ST,
MADRAS - 17.

N. B: We also undertake to coach Ladies.


www.thamizham.net - Free E Books No TM 14720



# "நான் பேசுகிறேன்"

இயேசுவும், புத்தரும், எனக்கு முன்னே தோன்றி மறைந்தார்கள்,
எத்தனை ஆண்டுகள் பொறுத்தாலும் இனி அவர் போல் பிறப்பதில்லை.
அன்பினை காட்டி, அருள் மொழி கூட்டி, வாழ்ந்திட இயேசு சொன்னார்.
ஆசையை வெறுத்து. அகமதை துடைத்து. அருள் பெற புத்தர் சென்னார்.
அன்பினைக் காட்டி அருள் மொழி பேசி அகமகிழ் வழ்ந்திடவா?
ஆசையை வெறுத்து, அகமதை துடைத்து, இகமதில் நிலைத்திடவா?
அவ்வித வாழ்கை, எவ்விதம் வாழ்வது, என்றே நீர் குரைத்து
அவர் தந்த போதனைகளனைத்தையும் கடல் நீரில் நீர் கரைத்து
விலங்கினும் கீழாய், வாழ்கின்ற உந்தன் நிலையையும் பார்க்கின்றேன்,
ஆயிரம் பேர்கள், அவர் போல் தோன்றி அருளினைப் பொழிந்தாலும்,
அன்பு வார்த்தையை அளித்தாலும் அவர் அழிவது உன்னாலே.
சொர்கத்தைக் கொடுத்து, சுபிட்சமாய் வாழ்க, என்றே சொன்னாலும்,
அதை அனைத்தையும் கெடுத்து நரகத்தை ஏற்றிடும் உந்தன் அழிவு மனம்,
அன்புடன் அஹிம்சையை கொண்டே வாழ்ந்தால் அதுவே நலமென்றேன்
ஆதரவற்ற நிலையிலும் இதை நான் ஆதரிக்கச் சொன்னேன்.
இந்தியா இரண்டாய் பிரித்திட்டபோது என்மனம் பதை பதைக்க
இந்து முஸ்லீம் ஒன்றாய் இருந்தால் அழிவது என்ன வென்றேன்
இல்லை அது பல தொல்லை, என்று சொன்னார் சில பேர்கள்,
தொல்லை இல்லை, தொந்தரவில்லை, ஒன்றாய் இருங்களென்றேன்,
அறிந்தான் கோட்சே, வைத்தான் குறியை, குடித்தான் என் உயிரை,
மூன்று குண்டுகள் வெடித்த பின்னே என் தலையது முகம் கவிழ,
முடிந்தும் முடியா முடிவைப் பெற்று சென்றேன் மேலுலகம்.
உடல் தான் விழுந்தேன் உயிர்தான் இழந்தேன் உள்ளம் இழக்கவில்லை!
எது மடிந்தாலும் எது மறைந்தாலும் சத்தியம் நின்று சொல்லும்.

எஸ். சி. பாலுராஜன் (II பி. ஏ.)
தேசியக் கல்லூரி, திருச்சி.

www.thamizham.net - Free E Books No TM 14720

Phone : 24598 Grams : ONAN

# THE INDUSTRIAL STORES COMPANY

## 12-A LINGHI CHETTY STREET

## MADRAS - 1.

*Specialists in*

## *DOMESTIC PUMPSETS*

DEALERS IN-

1) ELECTRIC MOTORS, PUMPS & PUMPSETS
2) STARTERS,
3) SWITCHES
4) "ONAN" GENERATING SETS

AUTHORISED STOCKISTS

5) WORTHINGTON SIMPSON MONOBLOCS
6) AGRICULTURAL PURPOSE DIESEL ENGINES

www.thamizham.net - Free E Books No TM 14720

# கேள்வி ஒன்று.... பதில் மூன்று

செல்லமுத்து, புதுக்கோட்டை

**1. நாம் யாரை வணங்குவது? ஈன்று எடுத்த தாயையா? படைத்த இறைவனையா?**

■ அந்த தாயைப் படைத்தவனே இறைவன் தானே

■ தாய் வணங்கும் இறைவனை.

■ தாயின்றி வேறில்லை தெய்வம்

T. வேலைச்சாமி, வேடசந்தூர்.

**2. உங்களில் அதிகமாக படித்தவர் யார்?**

■ இப்பொழுது தான் சமுதாயப் பள்ளியில் தொடக்க வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறோம்.

■ படிப்பைப் பற்றி கேட்கும் ஒரே ஆளையா நீர்.

■ நீர் எவ்வளவு படித்திருக்கிறீர்?

செல்வராஜன், பெருந்துறை.

**3 மனிதனுக்கு சிரிப்பு அவசியமா?**

■ சிரிப்பு அவசியம் ஆனால் 'சிரிப்பாய் சிரித்து' விடக்கூடாது.

■ சிரிக்காதவன் வாழ்வு சிறுத்துப் போகும்.

■ உலகிலுள்ள ஜீவராசிகளுக்கு எல்லாம் இல்லாதது சிரிப்பு, மனிதனைத் தவிர

சங்கேஸ்வரன், கோவை தொழில் நுட்பக் கல்லூரி

**4 மாணவர் என்றாலே வேலை நிறுத்தம் கலாட்டா என்று சமூகத்தில் கருத்து நிலவி வரும் இந்த நேரத்தில் சமுதாயத்தில் நல்ல பெயர் நாட்டிட ஒவ்வொரு மாணவனும் என்ன செய்ய வேண்டும்?**

■ தன்னை உணர்ந்து கொண்டாலே போதும்

■ இதனைப் பற்றி சிந்திக்காமல் இருந்தாலே போதும்.

■ சொல்லி விட்டால் செய்யக் காத்திருக்கிறீரா?

www.thamizham.net - Free E Books No TM 14720

கு. தண்டபாணி, வைணவ கல்லூரி
சென்னை.

5. சிக்கலான கேள்வி என்பதென்ன? அது எப்படி இருக்கும்?

▪ நீர் கேட்டிருப்பது தான். அது இப்படித் தான் இருக்கும்.

▪ மூன்று வயது குழந்தை கேட்பது போலிருக்கும்.

▪ இதைவிட சிக்கலாக இருக்கும்

ஜே. சந்தானம், மன்னார்குடி.

6 கடவுளும் மனிதனும் திடீரென்று சந்தித்தால் ஒவ்வொருவரும் என்ன செய்வர்?

▪ மனிதனுக்கு கடவுளை முதலில் அடையாளம் தெரியாது.

▪ அந்த நிலை ஏற்படவே செய்யாது. ஏன் அலட்டிக் கொள்கிறீர்

▪ ரொம்ப சிரமம் தான.

செ. பழனிச்சாமி, வேப்பலோடை.

7. மரியாதை தெரியாதவனை என்ன செய்யலாம்?

▪ சென்னையில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். என்ன செய்ய முடிகிறது?

▪ மாக்களில் ஒருவனாக மதிக்கலாம்.

▪ அந்நியோன்னியமாக பழகி விட வேண்டியது தான்.

---

சிறந்த கேள்விக்குப் பரிசு, ராணி முத்து வெளியீடு அளிக்கப்படும்.

---

8. மல்லாந்து படுத்திருப்பவன் கண் விழித்துப் பார்க்கும் போது மார்பில் நாகம் ஒன்று படம் விரித்து ஆடிக் கொண்டிருக்கிறது. தப்புவது எப்படி?

▪ தப்பிக்கும் ஆசை இன்னும் இருக்கிறதா?

▪ கனவாக இருந்தால் எங்களால் வழி கூற முடியாது.

▪ நீங்கள் ஆடாமல் படுத்திருக்க வேண்டியது.

த. இராம்மோகன், சமணக் கல்லூரி. சென்னை.

9. தன் ஒரு கண்ணை இழந்தாவது அடுத்தவனின் இரண்டு கண்களையும் கெடுப்பவர் தான் இன்றைய அரசியல்வாதி என்பது என் கருத்து, தங்கள் கருத்து என்ன?

▪ நீங்களே கூறி விட்ட போது நான் வேறு கூறுவதற்கு என்ன இருக்கிறது.

▪ இரண்டு கண்களையும் இழந்து விட்ட அனுபவமா?

▪ நல்ல கேள்வி கேட்டீரய்யா

www.thamizham.net - Free E Books No TM 14720

தா. வளன், வெட்டி வயல்.

10. 'ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்' இப்பழமொழிக்கு ஒரு புதிய சிந்தனையுடன் விளக்கம் தாருங்கள்.

■ என்ன 'பெரிய இடத்தில்' கை வைக்கிறீர்.

■ இதற்கெதற்கு புதிய விளக்கம்

■ 'ஆவது பெண்ணால்' நன்றாகத் தெரிகிறது. அழிவது—?

சீ. சீனிவாசன், நாகூர்.

11. அம்மா அடிக்கும் போது அழுகின்றோம் பிறகு சிறிது நேரத்தில் அன்பாய் இருக்கிறோம். ஆனால் அப்பா அடிப்பது இல்லை?

■ கேள்வியே சரியில்லையே ஐயா அப்பாதானே அடிப்பார்.

■ அது பயமல்ல· மரியாதை.

■ அந்தப் பயம் கொள்பவன் தான் 'மகன்'

பொ. நீதிவேந்தன், திருச்சி

12. பிராவ்தா என்றால் ரஷ்ய மொழியில் உண்மை என்று பொருள் படும் 'பூச்செண்டு' என்றால்?

■ 'பூச்செண்டு' என்றால் பத்திரிகை உலகில் உண்மை என்று பொருள்படும்.

■ என்ன கருத்தில் பிராவ்தாவைக் கொண்டு வந்து பூச்செண்டுடன் சேர்க்கிறீர்கள்.

■ உண்மை, புதுமை, இனிமை, எளிமை, தூய்மை வளமை, திறமை, பொறுமை,...... இது போன்ற மலர்கள் சேர்ந்தது தான் பூச்செண்டு.

---

❀ கோடிட்ட 9—வது கேள்வி சிறந்த கேள்வியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

பரிசு : "நானே நான்"
(ஜாவர் சீதாராமன்)

---

மீ. சோ. சுப்பிரமணியம், ஊர்க்காடு

13. திரைப் படத்தில் முத்தக் காட்சிகளை அனுமதிக்கலாம் என்று தணிக்கை கமிட்டி முடிவு செய்திருக்கிறதே இது நம் பாரதப் பண்பாட்டை மேன்மையுறச் செய்யாது அல்லவா?

■ கட்டாயம்

■ பாரதப் பண்பாடு — அப்படி ஒன்று திரையுலகில் இன்னும் இருக்கிறது என்று நம்புகிறீர்களா?

■ தணிக்கை குழுவை தணிக்கை செய்ய வேண்டியது தான்.

ராமசாமி. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி. சென்னை.

14. தாவரங்களுக்கு கேட்கும் சக்தி இருக்கும் போது ஏன் பேசும் சக்தியும் இருக்கக்கூடாது?

■ இல்லை என்று யார் சொன்னது?

■ ஆராய வேண்டிய விஷயம் தான்.

■ அது உண்மையானால் அவைகளும் அரசியலில் குதித்து விடும்.

www.thamizham.net - Free E Books No TM 14720

எஸ். எஸ். புருஷோத்தமன், மதுரை

**15.** வளரும் மாணவ சமுதாயத்தைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

■ நாங்களும் வளரும் சமுதாயத்தினரே. வளர்ந்தவர்களைக் கேளுங்கள்.

■ புரட்சி! புரட்சி! என்று வரட்சி கருத்துக்கள் அதிகம் வளர்ச்சி அடைந்து விட்டதால் மாணவ சமுதாய வளர்ச்சியும் வரட்சியாக இருக்கின்றது.

■ எதிர்கால நம்பிக்கையை அடியோடு இழந்து விட்ட சமுதாயம்!!

சி. சிவசுப்ரமணியன், பொள்ளாச்சி

**16.** இறைவன் என்பது யார்? அவனுக்கும் நமக்கும் என்ன தொடர்பு?

■ இறைவன் நம்மைப் படைத்தவன் அவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு — பொருளும் நிழலும் போல கடலும் அலையும் போல...

■ இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் கேட்க வேண்டிய கேள்விகளா இவை!

■ எல்லை இல்லாதவன். தாய்க்கும் சேய்க்கும் உள்ள தொடர்பே அதன் முன் எம்மாத்திரம்?

*With the best compliments of:*

**Getz Bros & Co., Inc.**

**330, Thambu Chetty Street**

**MADRAS - 1.**

www.thamizham.net - Free E Books No TM 14720



எதற்காக வெளியே போயிருந்தேனோ அதைமறந்து விட்டு வீட்டுக்குத்திரும்பி இருக்கிறேன். வெளியே போன காரியம் வீட்டுக்குள் நுழையும் போது தான் ஞாபகத்துக்கு வரவேண்டுமோ?

நான் வீட்டுக்குள் நுழைந்த போது அங்கே என்னை எதிர் பார்ப்பவள் போல் என் மனைவி ராதா காத்திருந்தாள் ...... "என்னங்க? போன காரியம் என்ன ஆச்சு?" என்று ஆவலுடன கேட்டாள். நான் பதில் பேசாமல் ஒரு நாற்காலியில் அமர்ந்தேன். அவளுக்கு என்ன பதில் சொல்வது?

"...என்ன நான் கேட்கிறேன் பதிலைக் காணோம்? எனக்கு உள்ளே கைவேலை இருக்கு. அடுப்பிலே சாதம் கொதிக்குது..." என்று அவள் கோபத்துடன் சொன்னாள்.

நான் தயங்கியபடி...."போனேன் ...ஆனால்..." என்று இழுத்தேன்.

"ஆனல் என்ன? அவர்-உங்க நண்பர் இல்லையா?" அவள் குறிப்பிடுவது என் நண்பன் ராஜாவை.

"...இருந்திருப்பான். ஆனல்...',

"போகலையா?"

"இல்லை..." நான் என் நாக்கைக் கடித்துக் கொண்டேன். பொய் சொல்லத் தெரியாத நாக்கு என்ன நாக்கு?

"ஏன் போகலே?"

"...வழியிலே வேறு வேலை ஒண்ணு வந்திருச்சு.. நாளை காலையிலே போகிறேன்..."என்று நான் அவளை சமாதானப் படுத்தினேன். அவளோ கோபத்துடன் என்னவோ முணுமுணுத்தாள்.

"போங்கோ உங்களுக்குக் கொஞ்சம் கூடப் பொறுப்பில்லே...சித்தே கழிச்சு உங்க மகள் பள்ளிக்கூடம் விட்டு வருவாள் — வந்ததும் கவுன் எங்கேன்னு கேட்பாள். அவளுக்கு பதில் சொல்லுங்கோ..." அவள் உள்ளே போய் விட்டாள்.

என் குழந்தை லட்சுமிக்கு இது ஏழாவது பிறந்தநாள். அதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன. அவள் தன் பிறந்த நாளுக்கென்று ஒரு பட்டு கவுன் வேண்டும் என்று சில நாட்களாகவே நச்சரித்துக் கொண்டிருக்கிருள். காலையில் பள்ளிக்கூடம் கிளம்பும் போது கூட

www.thamizham.net - Free E Books No TM 14720

ஞாபகத் படுத்தி விட்டுச் சென்றாள்

எனக்குத் திடீரென்று நண்பர் கதிவரனின் ஞாபகம் வந்தது. அவர் ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர்...

"...ராதா—ராதா..." நான் என் மனைவி ராதாவை அழைத்தேன்.

அவள் அடுப்படியில் இருந்தபடி என்னவோ முணுமுணுத்தாள். கொஞ்ச நேரத்தல் போர் வீரன் கையில் துப்பாக்கியுடன் வருவதைப் போல, ராதா தன் கையில் ஒரு கரண்டியுடன் வெளியே வந்தாள். "என்ன தலைபோகிற அவசரம்? சீக்கிரம் சொல்லுங்கோ உள்ளே வேலை இருக்கு..." என்று அவள் பரபரத்தாள். அப்போது கோபத்தால் அவள் முகம் சிவந்திருந்தது.

"ஒண்ணுமில்லே, 'இந்த வாரம் அல்லி' பத்திரிகை படித்தேன்..."

"அதற்கென்ன?" அவள் கேள்வியில் எரிச்சல்.

"அதிலே நம்ம கதிரவனுடையச் சிறு கதை ஒன்று வந்திருக்கு. படித்தேன் ரொம்ப பிரமாதமா எழுதி இருக்கார்..." என்றேன்.

"அவர் எப்போதுமே நன்றாகத்தான் எழுதுகிறார்..." என்ற ராதாவின் பதிலில் அவளது கோபம் கொஞ்சம் குறைந்து விட்டது தெரிந்தது.

"நம்மை மாதிரி ஒரு ஏழைக்குடும்பத்தைப் பற்றி எழுதி இருக்கிறார்."

"கதை என்ன?" ராதாவின் கோபம் பறந்து விட்டது. என்னைப் போலவே ராதவுக்கும் நண்பர் கதிரவனின் கதை ரொம்பப் பிடிக்கும்...

நான் அவளிடம் கதையைச் சொன்னேன்; அவள் ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டு,"...அப்படியே நம்ம குடும்பத்துக் கதை மாதிரி இருக்கு இல்லையா?" என்று வியந்தாள்.

"நம்ம குடும்பமென்ன—நம்மை மாதிரி இருக்க எல்லார் வீட்டுக் கதையும் இதுதான். நம்ம மாதிரி குடும்பத்திலே இருந்துதான் கதையே உண்டாகுது..." என்றேன் நான்

ராதா முறுவல் பூத்தாள். "அது போகட்டும். உங்க நண்பர் ராஜாவைப் பார்க்கப் போயிட்டு, அவரை பார்க்காமல் திரும்பி வந்த காரணம் இதுதானா? வழியிலே நூலகத்திலே அவர் கதையைப் படிச்சிட்டு அந்த நினைவிலேயே திரும்பி வந்திட்டீர்களாக்கும்...... ஐயோ பாவம்..." அவள் என்னைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"கோவிச்சுக் காதே ராதா.நாளைக்குக் காலையிலே போய் வாங்கி வருகிறேன்..." என்றேன்.

"நாளைக்கு மறுநாள் லட்சுமிக்குப் பிறந்த நாள். அதற்குச் சட்டை நாளைக்கு வாங்கப் போகிறீர்களாக்கும்... என்னவாவது செய்யுங்கோ. இப்போ வருவாள் பதில் சொல்லுங்கோ..."என்ற ராதா சமையலறையை நோக்கி நடந்தாள். நான் குழந்தை லட்சுமி வருமுன் இரவு வேலைக்குக்கொஞ்சம் முன்னதாகவே கிளம்பி விடுவோம் என்ற முடிவுடன் எழுந்து உடை மாற்றிக் கொண்டேன்.

---

**அனுபவம் கப்பலின் பின் உள்ள விளக்கை ஒக்கும்; அது கடந்த வழியை மட்டுமே காட்டும்.**

---

www.thamizham.net - Free E Books No TM 14720

கிளம்பியதும்,"...ராதா..." என்று குரல் கொடுத்தேன், "...நான் டூட்டிக்குப் போறேன்..."

"போயிட்டு வாங்க. வரும்போது மறக்காமல் கதிரவனின் கதை வந்திருக்கும் அல்லி பத்திரிகை ஒண்ணு வாங்கிக்கிட்டு வாங்க..." என்று ராதா சமையற் கட்டிலிருந்து சொன்னாள்.

நான் வெளியேறினேன்.

மறு நாள் காலையில் நண்பன் ராஜாவைப் பார்க்கச் சென்றேன். அவனிடம் குழந்தை லட்சுமிக்குப் பிறந்தநாள் கவுன் வாங்குவதற்காக பதினைந்து ரூபாய் கடன் கேட்டிருந்தேன். ஒரு தொழிலாளி நினைத்தவுடன் — அதிலும் பதினைந்து தேதிக்கு மேலே-பதினைந்து ரூபாய்க்கு ஒரு பொருளை வாங்கி விடக் கூடிய நிலையிலா இருக்கிறான்?

ராஜாவிடம் பணம் வாங்கி பனிரண்டு ரூபாய்க்கு ஒரு பட்டுக் கவுன் வாங்கினேன். கையொடு அந்த வார அல்லி பத்திரிகை ஒன்றும் வாங்கிக் கொண்டேன். கவுன் லட்சுமிக்கு அளவாகவும்-அழகாகவும் இருக்கும் என்ற முடிவுடன்- மகிழ்வுடன் புறப்பட்டேன்.

வழியில் எழுத்தாளர் கதிரவனுடைய வீடு இருப்பதால்,அவர் வீட்டுக்கும் போகலாம் என்று தீர்மானம் செய்து கொண்டேன்...

எழுத்தாளர் கதிரவனின் வீடு புறா கூண்டு வீடு என்றால் மிகையாகாது. அவருடைய வறுமை நிலைக்கு அந்த வீடே ஒரு அடையாளம்...

அவருடைய வருவாய் குறைவாக இருந்ததற்கு மாறாக, குடும்பம் பெரிதாக இருந்தது. தமிழகத்தில் ஒரு



எழுத்தாளன் எழுதிப்பிழைப்பது என்பது என்ன அவ்வளவு எளிதா?

நான் அவர் வீட்டை அடைந்தபோது. வாயிலில் போடப்படிருந்த ஈசிசேரில் அவரைக் காணாததால் அவர் வீட்டில் இல்லை என புரிந்து கொண்டேன் வாயிலிலேயே தயங்கி நின்றேன், உள்ளே எழுத்தாளரின் பெண் குழந்தை அழுகின்ற சத்தம் கேட்டது. அவளுக்கும் குழந்தை லட்சுமியின் வயது தான்...

"ஏன்டி என்னை இப்படி உபத்திரவப் படுத்தறே?" என்ற எழுத்தாளரின் மனைவி திலகவதியினுடைய பரிதாபமான குரல் கேட்டது.

"...எனக்கு சட்டை வாங்கிக் கொடு. போட்டுக்க நல்ல சட்டை இல்லே... பள்ளிக் கூடத்திலே பிள்ளைகள் கேலி பண்றாங்க...எங்க டீச்சர் என்னசொன்னாங்க-தெரியுமா?"

"என்ன சொன்னாங்க?"

www.thamizham.net - Free E Books No TM 14720

"...ஏண்டி உங்கப்பா எவ்வளவு அபரிய எழுத்தாளர்-இப்படி வந்து வருக்கு அவமானம் உண்டாக்கு ?' அப்படின்னு சொன்னுங்க. எனக்கு வெட்கமா இருக்கு......" என்று குழந்தை தேம்பினுள்.

சற்று மௌனம்...

"நான் என்னடி பண்ணுவேன்? உங்க அப்பாவைக் கேள்..." என்ருள் திலகவதி.

"உன்கிட்டே கேட்டா அப்பாகிட்டேகேட்கச் சொல்றே- அப்பாகிட்டே கேட்டா உன்கிட்டே கேட்கச் சொல்ருர்...எனக்குப் போட்டுக்கச் சட்டை ஒண்ணும் இல்லே யே...'என்று சிணுங்கினுள் குழந்தை.

"அப்பா என்னம்மா பண்ணுவார்? அவருக்கே நல்ல சட்டை ஒண்ணுமில்லே,நமக்கு எங்கே வாங்கித் தர்றது ? பேரும் புகழும் இருந்தென்ன- வயிறு நெறையுமா? எல்லாம் என் தலைவிதி...அவர் என்ன செய்வார்—பாவம் உலகத்திலே நல்லவங்க தான் கஷ்டப் படுறுங்க...நமக்கு என்னிக்குத்தான் விடிவு காலமோ? திலகவதியாரின் குரல் தழுதழுத்து, அழுகையாக முடிந்தது.

"அம்மா- அழாதேம்மா, எனக்குத் துணி—சட்டை ஒண்ணும் வேண்டாம். பணம் இருக்கச்சே வாங்கிக் கொடு... இப்போ என் பாவாடைக் கிழிஞ்சிருக்கு. தச்சுக் கொடு......" என்று குழந்தை தாயை சமாதானம் செய்தாள்.

"அடி என் செல்வமே..." என்று திலகவதியின் குரல் உணர்ச்சியுடன் வெளிப்பட்டது. நான் என் கண்களைத் துடைத்துக் கொண்டேன்...

நான் மௌனமாக அங்கிருந்துத் திரும்பி நடந்தேன். என் மனம், இனி என் கையில் இருக்கும். கவுன் லட்சுமிக்கல்ல, எழுத்தாளரின் குழந்தைக்குத் தான் என்று தீர்மானித்து விட்டது. தன் பிறந்த நாளுக்கு பட்டுக் கவுன் கேட்கும் குழந்தை எங்கே? தன் ஒரே பாவாடையைத் தன் தாயிடம் தைத்துக் கேட்கும் குழந்தை எங்கே?...

ஓரிடத்தில் அந்த கவுனை பார்சல் கட்டி கதிரவனின் முகவரிக்கு அனுப்பினேன். அதற்குள், 'எழுத்தாளர் கதிரவன் அவர்களுக்கு: நான் உங்கள் வாசகன், தங்கள் சிறு கதையை இந்த வாரம் அல்லியில் கண்டு மனம் நெகிழ்ந்தேன். எனது பரிசாக ஒரு பட்டுக் கவுன் இத்துடன் அனுப்பியுள்ளேன். ஒரு வாசகனின் அன்புப் பரிசை மறுக்காமல் ஏற்றுக் கொள்ளவும்...' என்று எழுதி, என் முகவரி அல்லாத வேறு முகவரியில் இருந்து அனுப்பி வைத்தேன்...

நான் வீட்டுக்குத் திரும்பியதும் எனக்காக வாயிலில் அமர்ந்து எதிர்பார்த்திருந்த குழந்தை லட்சுமி ஓடி வந்தாள். அவளைத் தொடர்ந்து என் மனைவி ராதாவும் வந்தாள்...

"அப்பா எனக்கு கவுன் எங்கே ?" என்று ஆவலுடன் கேட்டாள்.

நான் மௌனியானேன்...

---

எல்லோருக்கும் இதயம் ஒரே இடத்தில் தான் இருக்கிறது. ஆனல் எல்லா இதயங்களிலும் கருணை ஒரே இடத்தில் இருப்பதில்லை.

—சிங்செள

---

www.thamizham.net - Free E Books No TM 14720

"ஏன் பணம் கிடைக்கலேயா ?" ராதாவின் குரலில் ஏமாற்றம். நான் இல்லே" என்றபடி நாற்காலியில் விழுந்தேன் "பணம் கிடைக்கலே..."

லட்சுமி அழ ஆரம்பித்தாள். ராதா அவளை சமாதானம் செய்தாள். குழந்தையை சமாதானப் படுத்த,..."நம் மலட்சுமியோட பிறந்த நாளை நீங்க சம்பளம் வாங்கினதும் கொண்டாடுவோமா? அப்போ லட்சுமிக்கு ரெண்டு கவுன் வங்கித் தருவோம் என்னங்க ?"என்று என்னிடம் சொன்னாள்.

நான், சரி என்றேன், எழுத்தாளரின் குழந்தைக்கு உதவ முடிந்ததே என்று என் மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டேன்...

நான் வெளியே கிளம்பினேன்.

குழந்தை லட்சுமிக்கு இன்று பிறந்தநாள். நான் எழுத்தாளரின் குழந்தையைப் பார்க்கக் கிளம்பினேன்,

அப்போது எழுத்தாளர் வீட்டில் இல்லே, என்னை திலகவதியார் வரவேற்றார் ..."ஏது இந்தப் பக்கம் திடீர்ன்னு?" என்று விசாரித்தார்.

"...நேத்திக்குப் பகல்லே ஐயா வீட்டுக்கு வந்தாங்களாம்,..நான் இல்லே.. இன்னிக்கு வீட்டுக்கு வரச்சொல்லி ராதாகிட்டே சொன்னாங்களாம் அதனாலே வந்தேன்...குழந்தை எங்கே?" என்று நான் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அங்கே எழுத்தாளரின் மகள் வந்தாள்.அவள்—

ஒரு பழம் பாவடை அணிந்திருந்தாள். இன்னும் நான் அனுப்பிய பார்சல் வந்து சேரவில்லே போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். பிறகு கொஞ்ச நேரம் பேசிகொண்டிருந்து விட்டுத் திரும்பினேன்.

வரும் வழியில் அந்த கவுன் எழுத்தாளரின் பெண் அணிந்தால் எப்படியிருக்கும் என்று என் மனம் கற்பனை செய்து மகிழ்ந்தது.

வீட்டில் நுழைந்த என்னை ..."அப்பா இதோ பார்..." என்றபடி ஓடி வந்த குழந்தை லட்சுமியின் ஆரவாரம் நிமிரவைத்தது. அவளைப் பார்த்து நான் திடுக்கிட்டேன்.

அவள் ஒருபுது கவுன் அணிந்திருந்தாள்.

"இது ஏது?" என்று திடுக்கிட்டுக் கேட்டேன்.

குழந்தையைத் தொடர்ந்து வந்த ராதா சொன்னாள். "இந்தப் புது கவுனைக் காலையில் நம்ம எழுத்தாளர் கதிரவன் கொண்டு வந்தார். நேத்திக்கு பகல்லே வந்தார்லே அப்போ குழந்தை லட்சுமி அழுதுக்கிட்டிருந்தாள். ஏன்னு கேட்டார். பிறந்த நாள் துணிக்காக அழறுன்னு சொன்னேன் அப்புறம் லட்சுமியை சமாதானப் படுத்தினர் அதை மறக்காமல் இந்த கவுனைக் கொண்டு வந்து லட்சுமிக்குப் பிறந்த நாள் பரிசா கொடுத்திட்டுப் போனார்..."

நான் என்ன சொல்வதென்று புரியாமல் நின்றேன் — லட்சுமியைப் பார்த்தபடி. அவள் அணிந்திருந்த அந்த கவுன்...

நேற்று நான் லட்சுமிக்காக வாங்கி, எழுத்தாளர் கதிரவனின் குழந்தைக்காக பார்சலில் அனுப்பி வைத்த கவுன் தான்...

எழுதியவர் : ப. ஜீவா,

புலவர் நிறை நிலை மாணவர்.

www.thamizham.net - Free E Books- No TM 14720

வெண்பா.

# சற்றிதைக் காண்மின்

[தடித்த அடிக் கோடிட்ட சொற்களை வரிசைப் படுத்தின் 'காந்தியம் வாழ்க' என்ற பதம் கிட்டும்]

—அடியார்க்கு நல்லான்,
விவேகானந்தா கல்லூரி.

காதலும் வீரமுங் கண்களெனக் கொண்டுள்ள
சீதத் தமிழ்ப் பெண்ணின் செல்வனே!—நீதியைக்
1 காக்க. அறம்புரிய, காந்திவழி நின்வாழ்வைப்
போக்குவாய்! கொள்வாய் புகழ்

சாந்தம். கருணை தளராத நல்லன்பு
2 பாந்தள் எனினுமஞ்சாப் பக்குவம்—திந்தமிழா!
நீயிவை கொள்வாயேல் நிச்சயமாய்ச் சொல்கின்றேன்
தூயவர்கள் செய்வர் துதி.

செந்தீயாய் நாற்புறமும் செல்வங்கள் உள! நண்பா!
3 வெந்தத்தீ தன்னிலுளம் வேகுமுன்—சந்திரன்
தண்ணொளியாய் வாழ்ந்த தகையுடைக் காந்திவழி
எண்ணுவாய்! கொல்வாய் இடர்

அஞ்சிய தீயவர் ஆங்கிலேயன் தாள் பிடித்துக்
கெஞ்சியது கண்டே கிளர்ந்தெழுந்த—நெஞ்சுடைய
4 அண்ணலை எண்ணுவாய்! அன்ப! அவர்வழியில்
மண்மிசை வாழ்வுகொள் வாய்.

சுட்டெரிக்கும் பொற்கதிரில் துன்பங் கருதாமல்
5 சுட்டழிக்கும் வன்செயலால் சோர்வுறுமல்—கட்டுண்ட
பாரதத்தை அண்ணல் பரிவுடனே காத்திட்டார்!
வீரனுனக் கந்நெஞ்சம் வேல்

வாடாத நெஞ்சுடன் வண்டமிழா! நல்லறத்தைச்
சூடாரைக் கண்டே சுடு! துயர்—கூடாத
6 வாழ்வுற்றே ஏழையரை வாட்டுங் கயவரைப்
பாழ்பெற்றோர் என்று நீ பாடு

சூழ்துயரங் காணாதே! துஞ்சாதே; பாரதம்
7 பாழ்பட்டுப் போவதைப் பார்க்கின்றாய்!—கூழுண்டு
வாடுவோர் கண்டனை! வா! காந்திப் பாதையினில்
தேடுவாய் மாளாத் திரு

கவலை யடையாதே! கற்றவழி நின்று
8 புவியை உயர்த்தப் புகுவாய்!—எவருக்கும்
அஞ்சாதே! ஈசன் அருகிருப்பான்! அன்புடை
நெஞ்சத்தோ டிங்குநீ நில்

www.thamizham.net - Free E Books No.TM 14720

இன்றைய மாணவன் நாளைய மன்னவனுக
இன்று நீ நல்ல மாணவனுக
இருந்தால் தான் நாளை நீ
நல்ல மன்னனுக முடியும
எனவே,

# தம்பி!... கவனம்!

**கி. மல்லிகா கொல்லம்**

வாழ்வு என்னும் நெடுந்தூரப் பாதையிலே, இளமை என்ற மலர்ச் சோலையினுள் சென்று கொண்டிருக்கும் தம்பி!... கவனமாகப் போ.

பாதையின் இருபுறமும் பார்க்கத் தெவிட்டாத மலர்கள் குலுங்கிச் சிரிக்கின்றன அல்லவா? ஏமாந்து விடாதே! அவைகளிடையே கூர்மையான முட்கள் உன்னை முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன கல்வி என்ற இரைதேடி, கடுகிப் பறக்கும் பறவைகளே! வழியிலே, தேனொழுகும் பேச்சென்ற தீனியிட்டு, அரசியல் என்ற வலையிலே சிக்க வைக்கப் பார்ப்பார்கள். மதி மயங்காது பார்த்துக் கொள்.

இன்றைய மாணவன், நாளையக் கனல்லவா, அரசியலில் அவன் அனுபவம் தேடவேண்டாவோ, என்று கேட்கிருயா? கட்டாயமாக வேண்டுமப்பா. உன்னைச் சுற்றியுள்ள உலகத்தில் நடப்பதை யெல்லாம் உன் உள்ளத்தில் பதித்துக் கொள் ஆனல் உன்னுள்ளத்தை அவைகளில் பதித்து விடாதே அரசியல் என்ற மேடையிலே ஆட்டங்கள் பல நிகழும் கூட்டத்தில் ஒருவனுயிருந்து நீ அதை ரசிப்பாயக அரசியல் என்ற விளையாட்டில் ஆடுவோர் ... றமையை அளந்து பார். தூரத்திலிருந்து அவைகளை ரசித்துக் கொண்டிரு. ஆனல், ஆடப் புகுந்து விடாதே. ஏனென்றல் இது ஆடுதற்குரிய தருணமல்ல சேற்றில் வாழ்ந்து கொண்டே சேறுபடியாமலிருக்கும் செந்தாமரையைப் போல, சாக்கடை நீரை யுண்டு, இனிய இளநீரைத்தரும் தெங்கு போன்று.

உன்னைச் சுற்றியுள்ள உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் நடக்கும் வெறிக் கூத்துகட்கிடையே வாழ்ந்தாலும் அவைகளில் பங்கு கொள்ளாது 'என் கடன் கற்பதே.' என்று நீ இருந்து விடு. இன்றைய மாணவன், நாளைய மன்னவன்! உண்மை! ஆனல் இன்று நீ நல்ல மாணவனுக இருந்தால் தான், நாளை நீ நல்ல மன்னனுக முடியும். 'உயர்ந்த விதை தான்சிறந்த விளைவைத்தரும்'. நல்ல மாணவனுக இரு; நல்லாசிரியனுவாய். நல்ல மகனுக இரு; நல்ல தந்தையாவாய். நல்ல ரசிகனுக இரு; நல்ல கலைஞனுவாய்

இப்படிக்கு
உன் 'அக்கா'

www.thamizham.net - Free E Books No TM 14720

GIVE US THE PLEASURE OF SERVING YOU
THE LARGEST AND MOST
CONPREHENSIVE RANGE OF
DIESEL PARTS UNDER ONE ROOF ! ! !

Service Departments :
Fuel Injection : Calibration of Fuel Injection pumps reconditioning of injectors
Electrical : Electrical Starters, Dynamos, Magnetos and rewinding of Motors
Mechanical Servicing of Indu
Engineering : Strial Plant and Equipment

Manufacturing Lines :
"DVD" Fuel Injection Pipes
"DVD" Garbon Brushes
"DVD" Field Coils
"DVD" Governor Diaphragm.
"DVD" Nozzle Testers
"DVD" Fuel Injection Components

AGENTS
"PIONEER" 'O' RINGS, Oils Seals & Synthetic Packings
(A FENNER COCKILL PRODUCT)

# The Indian Engineering & Trading Company
(ESTABLISHED 1949)
*15, WALLERS ROAD, MADRAS*

TELEPHONE : 88761/88762
FACTORY :
VYASARPADI

TELEGRAM : FUELPUMP
BRANCHES:
BANGALORE
HYDERABAD

www.thamizham.net - Free E Books No TM 14720

வாழ்வியல்

நீ பாழ்பட்ட குடிசையிலோ, தாழ்பட்ட சமுதாயத்திலோ வீழ்பட்ட சூழலிலோ - எங்கிருந்தாலும் பரவாயில்லை. நீ நிச்சயம் வாழ்க்கையில் முன்னேறமுடியும் - அதற்கு ஒரேவழி

இன்றே—

இப்பொழுதே—


# உழைப்பை உள்ளத்தில் விதை!

இ. எஸ். மெர்வின்

கிறிஸ்துவக் கல்லூரி

ஆபிரகாம் லிங்கனிடம் ஒருவர், அமெரிக்காவைப் பற்றி ஒரே சொல்லில் விளக்குமாறு கேட்டபொழுது ஆபிரகாம் லிங்கன் கூறினர் "உழைப்பு" அவர் சொன்ன ஒரே வார்த்தை உழைப்பு!

எல்லா அறிஞர்களும் உழைப்புக்கு முதன்மை இடம் அளித்திருக்கின்றனர் உழைப்பின் மகிமையை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தே ஆக வேண்டும். நம்முடைய உழைப்பின் மூலம் நாம்மட்டும் பயன் அடைவதில்லை, நம்முடன் கூட பலரும் பயன் அடைவார்கள். இதுதான் உழைப்பிற்கே உரித்தான குணம்.



வாழ்க்கையில் மட்டுமல்லாமல் நாட்டிலும் முன்னேற்றம் காண வேண்டுமானால் உறுதியாக உழைத்தே தீர வேண்டும்

உழைப்பு என்ற விதையை விதைத்து விட்டால் பயன் என்ற அறுவடையை அடையமுடியாமல் போகமுடியாது. குப்பை பெருக்கும் பையனிலிருந்து குபேரராக ஆக வேண்டுமானால் ஆண்ட்ரு கார்னிஜி கொஞ்சமா உழைத்து இருக்க வேண்டும்?

இரண்டு டாலர் கூலிக்காக முப்பது மணி நேரம் உருளைக் கிழங்கு வயலில் வேலை செய்து, கோடீஸ்வரராக ஆக ராக் பெல்லர் கொஞ்சமா உழைத்திருக்க வேண்டும்?

கனேசாஸ்நகரில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த ஐசன்ஹோவர்

www.thamizham.net - Free E Books No TM 14720

அமெரிக்க ஜனாதிபதியாக வேண்டுமானால் கொஞ்சமா உழைத்து இருக்கவேண்டும்? இராணுவத்தில் சிப்பாயாக இருந்த நெப்போலியன் அரசனாக வேண்டுமானால் கொஞ்சமா உழைத்து இருக்கவேண்டும்?

நெப்போலியன் உழைப்புக்கு முதலிடம் கொடுத்தமையால் தான் எத்தனையோ மாமுடிகள் அவன் பாதங்களை அலங்கரிக்க முடிந்தது!

உழைப்பு வாழ்விற்கு வளம் தருவது மட்டுமல்ல, வாழ்கை வழங்குவது மட்டுமல்ல அதுதான் வாழ்விற்கு வண்ணமேற்றுகிறது. சுவை கூட்டுகிறது அழகு சேர்கிறது உண்ணும் உணவிற்கு சுவையைக் கூட்டுவது கூட உழைப்புதான்.

உழைப்பின் பயனாக டால்ஸ்டாய் 'போரும் அமைதியும்' எழுத முடிந்தது. கிப்பனால் ரோம் பேரரசன் மாட்சியும் வீழ்ச்சியும் எழுத முடிந்தது ஈன்ஸ்டினால் தொடர் நிலைக் கோட்டை கண்டு பிடிக்க முடிந்தது இந்த பெரிய செயல்கள் எல்லாம் உழைப்பின் பயனாக அடைந்த பலனே அன்றி வேறு ஒன்றும் இல்லை.

இவர்கள் மட்டும் உழைக்காமல் இருந்திருந்தால் இந்த உயரிய உன்னதமான நிலையை அடைந்து இருக்க முடியுமா? காலம் உள்ள வரை இவர்களுடைய உழைப்பு அழியாத தன்மை பெற்று விட்டது அல்லவா?

உழைப்பு என்ற நாணயம் நம்மிடம் இருக்கும் வரை எது வேண்டுமானாலும் வாங்கலாம் அந்த நாணயம் இல்லாவிட்டால் நடைபிணமாகத் தான் சுற்றிக் கொண்டு வர வேண்டும்.

உழைக்கும் மனிதனுடைய உறக்கம் இனிமையானது. உறக்கம் இல்லாமல் பலர் அல்லல்படும் பொழுது அந்த உறக்கத்தையே எளிதில் கொண்டு வரும் தன்மை உழைப்புக்கு உண்டென்றால் உழைப்பின பெருமையை என்னவென்று கூற முடியும்?

---

ஒருவனுடைய சிறந்த நண்பர்கள் அவனது பத்து விரல்களே

—காவியர்

---

ரிச்சர் ஆர்க்ரைட் எளிய குடும்பத்தில் பிறந்து உயர்ந்த இடத்தை எவ்வாறு அடைய முடிந்தது? இயந்திரத்தைக் கண்டு பிடிக்க கடுமையாக உழைத்ததின் பயன்— மனைவியின் வெறுப்பையும் பகையையும் அடைய நேரிட்டது. இருந்தாலும் உழைப்பை விடவேயில்லை!

இறுதியில் தான் கண்டு பிடிக்க வேண்டிய இருந்த இயந்திரத்தை கண்டு பிடித்து விட்டார் அவர் பின்னும் இயந்திரத்தை கண்டு பிடிக்க அவர் உழைத்த உழைப்பு கொஞ்சமா நஞ்சமா? இரவு பகல் என்று பாராமல் கடுமையாக உழைத்தார் அப்படி உழைத்ததின் பயனாகதான் அவரால் கண்டு பிடிக்க முடிந்தது.

பாத்திரம் செய்யும் முறையினைக் கண்டு பிடித்து பயன்படுத்துவதற்குள் பாலிஸ்ஸி பட்டவேதனைகளை வார்த்தைகளால் வருணிக்க முடியுமா வேதனைகளையும் சாதனைகளாக பயன் படுத்தியது உழைப்பு அல்லவா?

உறுதியுடன் உழைக்க வேண்டும் வேண்டா வெறுப்பாக உழைத்தால் முன்னேற முடியாது உழைப்பாளியின் வீட்டில் வறுமை எட்டிப் பார்க்கலாம் ஆனால் உள்ளே நுழைய முடியாது.

www.thamizham.net - Free E Books No TM 14720

கடுங்குளிரில் அடர்ந்த இரவெல்லாம் மெழுகுவர்த்தி நிலையில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த ரூஸ்லோ சாதாரண உழைப்பாளி அல்ல!

நம்முடைய உழைப்பில் தீர்மானம் இருக்க வேண்டுமே தவிர உணர்ச்சியின் வேகம் இருக்கக் கூடாது. தீர்மானத்துடன் உழைத்தால் எதுதான் வெற்றியை அடைய முடியாது?

உழைப்பின் பேரில் தான் நமக்கு வலிமை தோன்ற முடியும்! வறுமையுள்ள இடம் எதுவென்றால் உழைப்பில்லாத இடம். உழைப்பு உள்ள இடத்தில் மகிழ்ச்சியும் சிரிப்பும் தாண்டவம் ஆடிக் கொண்டு இருக்கும்.

கொடுக்க கொடுக்க இன்பம் பெருகுவது போல் உழைக்க உழைக்க இன்பம் பெருகும்.


## புதுமையான ஜவுளி ரகங்கள்

மளிகை டாய்லெட் குழந்தை உணவு முதலியவைகள்

குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்

## கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்

திருச்சிராப்பள்ளி

குறிப்பு: தீபாவளி வரை செவ்வாய்க் கிழமைகளிலும் விற்பனை உண்டு.


www.thamizham.net - Free E Books No TM 14720

விளம்பரம் :

"சமுகத்தை சீர்திருத்த உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடில் நாடு சீரழியும்"

—எல்லை காந்தி

# அழைக்கிறோம்

நண்பர்களே !

இன்றைய பொதுவாழ்வு என்பது அரசியலாகவே மாறி சமுதாயம் மறக்கடிக்கப்பட்டுவிட்டது. நாம் கவலைப்படத் தேவையில்லாத அளவுக்கு இன்னும் சமுதாயம சீர்திருந்திவிடவில்லை சாதிப்பாகுபாடுகளும் ஏற்றத் தாழ்வுகளும் இன்னும் நீங்கிய பாடில்லை மாறாக நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கின்றது இவற்றுடன் இனம் மொழிப் பாகுபாடுகள் என்றுமில்லா அளவில் தலைவிரித்தாடுகின்றன.

ஆனால் பொதுவாழ்வு அரசியல் வாழ்வாகவே மதிக்கப்பட்டு காந்தியடிகள் போன்றோருக்குப் பிறகு சமுதாய சீர்திருத்தம் பெருமளவில் மறக்கப்பட்டு விட்டது அரசியல் பேச்சுக்களும் தேர்தல்களும் மட்டுமே நமது அடிப் படைப்பிரச்சினைகளை தீரக்கக்கூடியன அல்ல என்பதை நம்மில் பெரும் பாலோர் உணரவில்லை பொதுவாழ்வு என்பது பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கிடையே கலப்பது அல்ல நடை பாதைகளிலும் சேரி களிலும் கிராமங்களிலும் புரளும் மக்கள் திரளிடையே ஊடுருவுதலே பொது வாழ்வு என்பதை இன்று வாழ்நது கொண்டிருப்போருக்கும் இனிவாழப் போகின்றவர்களுக்கும் திட்டவட்டமாக எடுத்துரைக்கும் காலக்கட்டத்தில் நாம் நின்று ,கொண்டிருக்கின்றோம்

பொது வாழ்வுக்கும் தேர்தல்களியாட்டங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளின் தெளியாத் தன்மையினால் இன்று மாணவர்கள் மயங் கியுள்ளனர் மாணவ நிலையிலிருந்து விடுபட்ட இளைஞர்கள் தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலையைப் பற்றிக் கவலைப்படாது தன்னலப் புல்லு ருவிகளாய் வாழ்ந்து இந்நாட்டை உலுத்துப்போன வெறுங்கூடாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இருசாரரரையும் ஒன்று படுத்தி அவர்கள் அரசியல் வாழ்வில் அல்லாது சொந்த வாழ்வில் ஈடுபடும் முன் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தினை அதன் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளச் செய்து பயிற்சி யளிப்பதே இன்று முதற் கடமை என்பதையுணர்ந்து The Indian Youth Association அமைக்கப் பட்டிருக்கின்றது

நீங்கள் அரசியற்கட்சி யொன்றினை சார்ந்தவரா இல்லையா என்பது எங்கள் பிரச்சினை அல்ல இன்றைய தேவையினைப் புரிந்து கொண்டவரா என்பது தான் எங்கள் கேள்வி ஆரவாரங்களிலிருந்து ஒதுங்கி உங்கள் காலடிகளின் கீழ் நசுங்கிக் கொண்டிருக்கும் மக்களைப் பாருங்கள் அவர்களால் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் .அவர்களோடு நாம் கலப்பதும் அவர்களைக் காப்பதும் நமது கடமை அந்தக் கடமையைச் செய்ய The Indian Youth Association துணை செய்யும்

இவ்வமைப்பு ஆரம்பிக்கப் பட்டுவிட்ட ஒன்றல்ல ஆரம்பிக்கப் படப் போகின்ற ஒன்று அடையப் போகும் இடம் மட்டுமே இனங்கண்டு கொள்ளப் பட்டிருக்கின்றது போகும் வழி இன்னும் கண்டுகொள்ளப் படவில்லை இவ்வமைப்பை அமைப்பதிலும் குறிக் கோள்களை வரையறுப் பதிலும் எங்களுடன் துணை செய்ய உங்கள் அனைவரையும் அழைக்கின்றோம் தொடர்பு கொள்க.

அன்புடன்

அமைப்புக்குழுவினர்

முகவரி :

N. POOSAPPA Joint. Secretary
THE INDIAN YOUTH ASSOCIATION
Nallambalayam, Kasipalayam P. O. ERODE-2.

www.thamizham.net - Free E Books No TM 14720

கற்பனைக்கூடம்

பரிசு : காந்தியடிகளின் 'சத்தியசோதனை'

பரிசு பெறுபவர் : பொ. கோபால் பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

# காந்தியடிகள் சுடப்படாமல் இன்று நம்மோடு வாழ்ந்திருந்தால்...

இந்தக் கேள்வியை ஒரு மாற்றுக் கட்சிக்காரனிடம் கேட்டிருந்தால் காங்கிரஸ் கலைக்கப் பட்டிருக்கும் எனச் சொல்லியிருப்பான். ஒரு காங்கிரஸ்காரனிடம் கேட்டிருந்தால் காங்கிரஸ் இத்தனை மாநிலங்களில் வீழ்ந்திருக்காது என்று சொல்லியிருப்பான், ஒரு நடுநிலையாளனிடம் கேட்டிருந்தால் கையில் கமண்டலத்தோடு காசி ராமேஸ்வரம் எனக் கைலாயம் போயிருப்பார் என்றிருப்பான். என்னைக் கேட்டால் தற்கொலை செய்து கொண்டிருப்பார் எனச் சொல்லியிருப்பேன் ஆம்! கருணையின் வடிவம் காந்தி தன் கடைசி மூச்சை இந்தக் கறை படிந்த மண்ணிலே கண்ணீரோடு தான் விட்டிருப்பார். கோட்சே சிறிது அவசரப் பட்டு விட்டான். குமுறிக் கொந்தளிக்கும் ஏழையின் நெஞ்சு அவனை அரித்துக் தின்றிருக்கும்.

கங்கையின் ஓரத்திலே சிரித்தாடும் கோதுமையும், காவிரிப் படுகையில் விளைந்திருக்கும் செந்நெல்லும் பண்ணை முதலாளி வீட்டில் பதுங்கியிருக்கும் நிலைகாண்பார். பாடுபட்டுப் பாடுபட்டுப் பாதியாகிப் போன பஞ்சை விவசாயியையும் பார்ப்பார். இரத்தத்தின் வடிவல்லவா? ஏசுவின் மறுபிறப்பல்லவா? பொறுப்பாரு, புன் முறுவல் தான் மலருமா? இறப்பான். அணு அணுவாய் இறப்பான்.

பிர்லாவின் ஆலைகளிலே கிளம்பும் பிரம்மாண்டமான புகைக் கூட்டம்... கீழே வேலை நீக்கம் செய்யப்பட்டு வேதனையால் கதறுகின்ற உழைக்கும் கூட்டம் இரத்தக் கண்ணீர் கசியும் காந்தியின் விழிகளில் இருந்தது.

வறியவன் வாட, வலியவன் வீழ இனியுமா இந்த நிலை என ஆர்ப்பரித்து போர் முரசு கொட்டிய அந்தப் புனிதனின் கரங்கள் அதே நிலையில் இன்றும் நீடிப்பது கண்டு பொறுக்குமா?

எதிர்காலச் சிற்பிகள், எழிலான பாரதத்தின் இளம் குருத்துக்கள் புரியாத அரசியல் புதை குழிதனில் இந்தப் பொல்லாத அரசியல்வாதிகளால் தள்ளப்படும் நிலை காண்பான். அரசியல் அழிசேற்றில் இவர்கள் அடியோடு மாண்டு போகவா தான் இத்தனை அவசரத்தோடு சுதந்திரம் வாங்கித் தந்தோம் எனச் சற்றுச் சிந்திப்பான். பின்னர் குண்டுக்கு வேலையில்லை அந்தக் கொள்கைச் சீலனின் உயிர் குடிக்க.

www.thamizham.net - Free E Books No TM 14720

பாலும் தேனும் பெருகி ஓடும் எனப்பறை பறைந்தோமே பஞ்சை யென்னும் பராலி என்றும் பாடு பாடு இராது எனப் பாரெல்லாம் சொல்லி வைத்தோமே சாதிகள் ஒழிக்கப்படும் எனச் சண்டமாருதம் செய்தோமே உண்மையில் சொன்னது நடந்ததா என எண்ணிப் பார்ப்பான் சொன்ன வாக்குறுதியைக் காற்றில் பறக்க விடும் சுந்தரக் கூட்டத்தைச் சேர்ந்தவனல்லவே காந்தி. உண்ணு நோன்பை நாடி உயிரை மாய்த்துக் கொள்வான்

இத்தனைக்கும் மத்தியில் ஓர் இனிய எண்ணம் அவன் நெஞ்சிலே நிழலாடும். தன் அகிம்சை தன் மண்ணிலே மாண்டு போனாலும் அமெரிக்க மண்ணிலேனும் கதர் சட்டை போட்டுக் கொள்ளாத உண்மைக் காந்தியவாதியான மார்ட்டின் லூதர் கிங்கினால் பரப்பப்படுகிறது என்ற எண்ணத்தினால் இளநகை பூப்பான். அதோ அதுவும் மாண்டு போனதே ஓர் அறிவு கெட்டவன் செயலினால்

சிந்திப்பார். மனிதத் தன்மையற்ற இந்த மரமண்டைகளுக்காகத் தன் மண்டையைக் குழப்பிக் குழப்பிச் சிந்திப்பார் முடிவு? தற்கொலை! இதைத் தவிர வேறு வழியே தெரியாது. பிணமாகிப் போனால் மட்டும் பிரச்சினை தீர்ந்து போகுமா? போகாது! இருப்பினும் இந்தப் பொல்லாத சமுதாயத்தின் போலிக் கோலம் கண்டு பொறுத்திருக்கத் தான் முடியுமா, இறுதியாக சொல்வான், ஏ நன்றி கெட்ட அரசியல் வாதிகளே! அறிவைப் படைத்த இறைவன் உங்களுக்கு மனதைப் படைக்கவில்லையே. மனச்சாட்சியற்ற மகாப் பெரிய மனிதர்களே இனியேனும் இளம் தலைமுறையினரை வாழவிடுங்கள்" என இரக்கமுறக் கூறுவான். பின்னர் அந்த இனியவனின் விழிகள் திறக்கா கருமணிகள் கடைசியாகப் பாரதத் திற்குத் தருவன இரு சொட்டுப் பனித்துளிகள்.

இப்படித் தான் நடந்திருக்கும் காந்தி கொல்லப்படாமல் இருந்திருந்தால் அரசியல் செப்படி வித்தைகள் ஆயிரமாயிரம் பல்கிப் போகியிருக்கும் இன்றைய பாரத மண்ணில் அந்த அகிம்சைச் செம்மலுக்கு அரசியலில் நாணயம் காட்டிய முதலும் கடைசியுமான அந்த நல்லவருக்கு வேறு என்ன முடிவு ஏற்பட்டிருக்கும். உண்மையாகச் சொன்னால் கோட்சேயின் குண்டுகள் அவனைக் கொல்லவில்லை. காப்பாற்றி விட்டன.

* * *

| கற்பனைக்கூடம்<br><br>(டிசம்பர் 69)<br><br>பெயர்:<br><br>கல்லூரி:<br><br>முகவரி: | **தமிழகத்தில் மீண்டும் மூவேந்தர்கள் ஆட்சி ஏற்பட்டால்...**<br><br>பரிசு: நீங்கள் விரும்பும் முகவரிக்கு ஓர் ஆண்டு பூச்செண்டு சந்தா.<br><br>முழுத்தாளில் 2 பக்கத்திற்குள் உங்கள் கற்பனை செல்கின்றபடி எழுதலாம். இறுதி நாள். 20-11-69 கோடிட்ட இடத்தைக் கிழித்து அனுப்பினால் மட்டுமே ஏற்கப்படும். |
|---|---|

www.thamizham.net - Free E Books No TM 14720

## செய்திகள் வாசிப்பது

# பூச்செண்டு வானொலி நிலையம்

◎ உயிரைப் பணயமாக வைத்து, கம்யூனிஸ்ட் பிடியில் உள்ள கிழக்கு ஜெர்மனியிலிருந்து சுதந்திர உலகை நாடி பலர் தப்ப முயற்சி செய்து வருகின்றனர். செகோஸ்லோவேகியா, ஹங்கேரி, பல்கேரியா போலந்து, ருமேனியா, யுகோஸ்லோவியா பகுதியிலிருந்து தப்பிச் செல்ல முயன்றதாக கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த 66 பேர்கள் கடந்த 7 ஆண்டுகளில் பிடிபட்டிருக்கிறார்கள் இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் ரஷ்யா வழியாக தப்ப முயன்ற 119 பேர் சிறை பிடிக்கப் பட்டிருக்கின்றனர்

◎ தட்டெழுத்துக் காரர்களுக்கு ஒரு செய்தி: ஜெர்மனியை சேர்ந்த சிக்கி என்ற பெண் தட்டெழுத்துப் போட்டியில் மற்றவர்களை யெல்லாம் விட ஒரு நிமிடத்திற்கு 60 சொற்கள் அதிகமாக அடித்து இருக்கிறாள். 'சிக்கி' ஒரு நிமிடத்திற்கு அடித்த சொற்களின் எண்ணிக்கை 716.6 ஆகும். சாதாரணமாக நாம் படிக்கும் வேகத்தைவிட இப்பெண்ணின் தட்டெழுத்து வேகம் அதிகம் ஸ்டட்கார்ட் நகரின் பத்திரிகை அலுவலகத்தில் இப்பெண் பணியாற்றுகிறாள். U.P.S.

◎ 1773-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றம் ஏற்படுத்த பட்ட போது தெருக்களைச் சுத்தம் செய்ய, புதிய சாலைகள் அமைக்க தெருவில் கியாஸ் விளக்குகள் போட முதன் முதலில் லாட்டரி சீட்டுக்கள் நடத் தப்பட்டனவாம். இது 1830 வரை தொடர்ந்ததாக சென்னை வரலாறு கூறுகிறது. இதே முறையில் தான் இன்றைய தமிழக அரசும் பரிசுச் சீட்டுகள் நடத்துகிறது போலும்.

◎ அமெரிக்காவில் LSD என்ற மிக சக்தி வாய்ந்த பயங்கர போதை மருந்து பரவி வருகிறது. இதை உபயோகிப்பவர்கள் விசித்திரமான உணர்வுகளை பெறுகிறார்களாம். ஒருவர் தான் ஒரு "ஆரஞ்சு பழம்" என்ற உணர்வு ஏற்பட்டு தன்னை யாராவது தொட்டால் தான் ஆரஞ்சு சாறாக போய் விடுவேன் என்று பயப்படுவாராம். கண்பார்வை மங்கி விட்டதாக உணர்ந்த ஒருவர் தன் கண்விழிகளைப் பிடிங்கிக் கொண்டார். கேட்டதற்கு அவர் பதில்: "அப்போது தான் என்றால் சரியாகப் பார்க்க முடியும்." Plain Truth

◎ கடைகளில் சாமன்கள் வாங்கும் போது கொடுக்கப்படுகிற பிளாஸ்டிக் பைகளில் அழகிய கவிதைகளை அலங்காரமாக அச்சடித்துக் கொடுத்து இல்லந்தோறும் இலக்கிய மணத்தை பரப்பி வருகிறார்கள் இந்த ஜெர்மன் நூல் வெளியீட்டாளர்கள் U.P.S.

◎ ஒரு முறை காந்திஜி, படேல், குமரப்பா ஆகிய மூவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். வேப்பிலை சட்னி பரிமாறப் பட்டது காந்திஜி அந்த சட்னியை ருசித்துச் சாப்பிட்டார். இதைக் கண்ட படேல் சொன்னாராம்: "நம் பாபு இது வரை ஆட்டுப் பால் தான் சாப்பிட்டு வந்தார். இப்பொழுது ஆடு தின்னும் உணவையே சாப்பிட ஆரம்பித்து விட்டார்"

செய்தி; மாதையன்

சேலம்—செயற்குழு

www.thamizham.net - Free E Books No TM 14720

with best compliments from :

# Raman Engineering Corporation,

5. THAMBU CHETTY STREET,

G. T. MADRAS-1.

Suppliers of Workshop Machinery, Woodworking and Sheet Metal Machinery.

Phone No : 23454.

www.thamizham.net - Free E Books No TM 14720

# வாழ்ந்தது போதும்!

இ. துரைசாமி

II எம்.பி., பி.எஸ். ஸ்டான்லி
மருத்துவக் கல்லூரி

இளமை துடிக்கிறது! பருவத்தின் கோளாறு என்னைப் பல திக்குகளிலும் இழுத்துச் செல்கிறது!! எண்ணமும் செயலும் அடிக்கடி மாறுகிறது. என்ன பருவம், இளமைப் பருவம்!? உடம்பெல்லாம் சூடாகிறது. ஆசையின் துடிப்பு!

படித்தேன். பட்டம் பெற்றேன். பதவிக்கும் வந்தேன் என்ன பதவி? பண்பினை வளர்க்கும் பதவி! சமுதாய நலனைப் பேணும் பதவி!! ஆம் தூய்மை நிறைந்த ஆசிரியப் பதவிதான்!

ஆசையை அடக்கியாள இயலவில்லை. மணம் செய்தேன். யாரை? தேன்மொழியை! உறவினள் படிப்பு வாசனை இன்னதென்று அறியாதவள் சொந்தத்தின் செழிப்புக்காக மணந்தேன். காமத்திற்காக மணந்தேன். காமம் தீர்ந்தது கல்லாத மனைவியின் வாழ்க்கை கசந்தது? ஏன்? காலத்தின் கோளாறு தான். நாகரீக மோகம்!! அதோ என்னுடன் பணியாற்றும் நண்பர்கை அழகு மனைவிகளுடன்கள் கோர்த்து மெரினாவில் உல்லாசப் பவனி வருகிறார்களே! இதுவன்றோ வாழ்க்கை! இதுதானே இல்லற இன்பம்!! படிக்காத மனைவியை நான் எப்படி வெளியே அழைத்துச் செல்வேன்? பார்ப்பவர்கள், படித்தவர்கள் இகழ்வார்களே! படித்திருந்தும் பாழாகிப் போனேன். இல்லற இன்பம் என்பார்கள், என்னைப் பொறுத்த மட்டில் இல்லறத்தில் இன்னல் தான்!

சரி, சரி! இப்பவும் குடிமூழ்கி விடவில்லை. வேறு ஒன்று பார்த்துக் கொண்டால் போகிறது. ஆனால் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா? ஏற்றால் என்ன ஏற்காவிடில் என்ன?

புதிய ஓடத்திற்கு பழைய ஓடம் துணையாக இருக்கட்டுமே!



www.thamizham.net - Free E Books No TM 14720

அதோ... என்க்கு முன் சீட்டில் ஈஓ அழகு அன்னம் உட்கார்ந்து இருக்கிறது! அவள் மட்டும் என் வாழ்வுப் பெசகுளாக அமைந்து விட்டால்... தேடிக் கிடைக்காத இன்பத்தையெல்லாம் பெறுவேன்! அழகு! நல்ல அழகு!!

நெஞ்சத்தில் நிலைத்து விட்டாள். நடனம் ஆடுகிருள். ச்சே... பெண்ணென்ன பெண்ணோ?! அன்னம்! அழகு மயில்!! ஆசைப் பெட்டகம்!]! அதோ வண்டியை விட்டு இறங்கிச் செல்கிருளே. நெஞ்சத்துப் பேரழகி! கிளியோபட்ரா!! அவளுக்கு ஈடு அவள் தான்!

சென்ருள். சென்றேன் பின். அதோ என்னையும் ஓர் முறை பார்த்திட்டாளே! இரித்தும் விட்டாள்!! யாரைப் பார்த்தோ? என்னைத் தான்? ஆம், என்னையே தான்!!

அடடா. இவளா? எங்கோ பார்த்திருக்கிறேன். என் மனைவிக்கு சிநேகிதி! மிஸ் மலர் கொடி! நல்ல வேளை! பேசிடுவோம்.

'மிஸ். மலர் கொடி!'

அய்யய்யோ! திரும்பி விட்டாளே நான் அழைத்தது காதில் விழுந்து விட்டதாக்கும்.

'ஓ! நீங்களா? சரியாக தான் கவனிக்க வில்லை. மன்னிக்கனும், எனக்கு இப்பொழுது நேரம் கிடைக்கிறதே இல்லை. அலுவலகத்தில் வேலை நிறைய இருக்கு... தேன் மொழியைக் கேட்டதாகச் சொல்லுங்கள். நானே வந்து பார்க்கிறேன்.'

மறு நாள் தேன் மொழியைத் தேடி வந்தான் மலர். வேடனைத் தேடி புரு தானே வலையில் சிக்கியது

எனக்கு ஓரே எண்ணம்- அவளை எப்படியேனும் அடைந்தே ஆக வேண்டும்.ஜன்னல் வழியே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

யோசனை ஒன்று உதித்தது! மேஜையைத் திறந்தேன். நினைத்தேன். எழுதினேன்.

---

"பண்டியன் எக்ஸ்பிரஸ்" விடப்படுமுன், சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்த் துறையினரை, இரயில்வேயிலிருந்து இதற்கு என்ன நிறம் அடிக்கலாம் என்று ஆலோசனை கேட்டார்களாம். மீன் கொடி பாண்டியர்களது ஆகையால் அந்த மீன் வாழும் இளநீல நீரின் நிறத்தை அடிக்கலாம் என கருத்துத் தெரிவித்தனராம் பச்சையப்பன் தமிழ்த்துறையினர்.

'பச்சையப்பன்' வகுப்பில் சொன்னவர் : திரு. பிரகாசம், எம்.ஏ.,

---

'அன்பு மிஸ். மலர்க் கொடி! உன்னை எத்தனையோ நாள் பார்த்திருக்கிறேன், ஆனல் சில நாட்களாகத் தான் என்னை நீ கவர்ந்து விட்டாய். நானும் மனதை திறந்து விட்டேன். உங்கள் அன்புக்கு எதிர் நோக்கி நிற்கிறேன். நீங்கள் மனது வைத்தால்... என் வாழ்வு செழிக்க வழியுண்டு. மன்னிக்கவும்.'

இங்ஙனம்

'அருண்'

www.thamizham.net - Free E Books No TM 14720

கம்யூனிசம் ரஷ்யாவில் வெற்றியளித்தா? ரஷ்ய அரசாங்கம் சில சமயங்களில் தன்னையும் அறியாமல் வெளியிட்டு விடுகிற ஆதாரங்களைக் கொண்டு நிபுணர்கள் கண்டு பிடித்து: கம்யூனிஸ்டுகள் பதவிக்கு வந்த 1917 லிருந்து 1960 வரை, 1927, 1928 இந்த 2 ஆண்டுகள் நீங்களாக சுமார் 40 ஆண்டுகளில் தொழிலாளர்கள் விவசாயிகள், ஆகியோரின் வாழ்க்கைத்தரம் ரஷ்ய புரட்சி முன்பு இருந்ததைக் காட்டிலும் மிக மிகக் குறைவான அளவிலேயே இருந்து வந்திருக்கிறது.

—ஆதாரம்: கல்கண்டு 17-7-69

முழுவதையும் ஒரு முறை வாசித்தேன். எல்லாம் சரியாக இருக்கிறது. அவள் பைக்குள் யாருக்கும் தெரியாமல் கடிதத்தை போட்டு விட்டேன் மிஸ். மலர்விடை பெற்றுக் கொண்டாள்.

மிஸ். மலர் பைக்குள் கடிதம் கிடப்பது கண்டு திடுக்கிட்டு போவாள்! என்ன நினைப்பாளோ?!

"என்ன இது? இவ்வளவு நாளாக நல்ல மனிதராய் இருந்தவர் இப்படி மாறுவார் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவேயில்லை இப்பத்தான் தெரிகிறது. காமுகன்! காதகன்!! தேன் மொழியின் வீட்டிற்கு நான் சென்றதே முதல் தப்பு அவளும் ஒரு முட்டாள். அவளாவது தன் கணவனை அடக்கி வைத்திருக்க வேண்டும் ச்சே! சே!! கல்யாணமானவர். கையில் வேறு குழந்தை! தேன் மொழியிடமே சொல்லிப் பார்க்கிறேன் என்ன செய்வாளோ. பார்க்கலாம்.'

வாரம் ஒன்று ஓடியது. நான் எழுதிய கடிதத்திற்கு பதிலே இல்லை ஒரு வேளை என்னை வெறுத்திருப்பாளோ? மனம் ஆசையில் துடித்தது. இன்பம் பெருக்கெடுத்தது.

தனிமையில் உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன்' சார், போஸ்ட்!

வெளியே சென்றேன். தபாலை கையில் வாங்கினேன். அவசரமாக உறையைக் கிழித்தேன்.

'அன்பரே! தங்களை நான் பொறுதற்குக் கொடுத்து வைக்க வேண்டும். இன்று இரவு என்னை கண்ணகி பூங்காவில் சந்தியுங்கள். நம் எதிர் காலத்தைப் பற்றி பேசலாம்

'மலர்கொடி!

ஆகா! என்ன அதிர்ஷ்டம். எனக்கு இன்பம் இழைந்தோடியது எப்படியும் இன்று மலர் கொடியை சந்தித்தே ஆகவேண்டும்.

மாலைஇறந்தது. இரவு பிறந்தது. யாரும் அறியாமல் பூங்காவினுள் மெல்ல நுழைந்தேன்.

சிலம்பேந்தி நின்ற கண்ணகி சிலையருகே கீழே ஓர் உருவம் கிடந்தது. அந்தக் காட்சி எனக்கு பயத்தைக் கொடுத்தது. அருகே சென்றேன். யார் அந்த உருவம், ஐயோ, என் மனைவியா? ஆம்! அவளே தான்!! பெரிய பாவத்தைச் செய்து விட்டேன் கதறினேன். துடித்தேன் அதோ கீழே ஓர் கடிதம். பிரித்தேன்.

'அன்புக் கணவரே!

www.thamizham.net - Free E Books No TM 14720

படிக்காத என்னைத் திருமணம் செய்ததமையால் உங்கள் வாழ்வு பாழாகி விட்டதாக எண்ணி வருந்தினீர்கள். நாகரீக மோகத்தால் ஏன், காமவெறியால் கறந்திட்ட பாலை ஏறிந்திட்டு கலப் படம் நாடிச் சென்றீர்கள் இதனால் ஊரும் உலகமும் உங்களைத் தூற்றியது. தூற்றலைக் கேட்கச் சகியாமல் நான் பலமுறை உங்களை கெஞ்சிக் கேட்டிருக்கின்றேன். பலனில்லை வாழ்க்கையோடு நான் போராடினேன். ஆனால் வாழ்க்கை என்னோடு போராடி விட்டது

என் தோழி மலர்கொடியிடம் நீங்கள் நடந்து கொண்ட மட்டரகமான செயல் எனக்குத் தெரியாதென எண்ணினீர்கள். எனக்கு எல்லாம் தெரியும். இதையெல்லாம் கேட்டுக் கொண்டு வாழக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. மனம் வெறுத்தேன் வாழ்க்கை கசந்தது. எனவே என்தோழி மலர் கொடி எழுதுவது போன்று நானே எழுதி உங்களை இங்கு வரவழைத்தேன்.

இனி உங்கள் விருப்பம் போன்று வாழ்ந்து வாருங்கள் ஆனால் ஒன்று - உங்கள் விருப்பம் போன்று காமவெறிபிடித்துவீதி வழி சுற்றும் வாலிபவர்களுக்கு இது ஒரு எடுத்துக் காட்டாக அமையுமென நம்புகிறேன்.

'தேன்மொழி'


---


# அமிர்தாஞ்சன் இன்ஹேலர்

மூக்கடைப்பைப் போக்கும். தலைபாரத்தை நீக்கும். இதமான உடனடி நிவாரணம். கைவசம் ஒன்று இருக்கட்டும்—எந்த நேரமும் தேவைப்படலாம்.
அமிர்தாஞ்சன் இன்ஹேலர் கையடக்கமானது, உபயோகிக்க எளிதானது, சிக்கனமானது.




தயாரிப்பு:
அமிர்தாஞ்சன் லிமிடெட்,
சென்னை-4.

# சென்னையில்

# டிக்கெட் இல்லாமல் பயணம் செய்ய 14 வண்டிகள்

**இரயில்வே நிர்வாகத்தின் கவனக்குறைவால் உருவான**

**அநாதை ஸ்டேசன்!!**

**வில்லியம் பர்ணண்டஸ்.**
பொறுப்பாசிரியர்

"ஸார்! பட்டாபிராம் சைடிங்குக்கு ஒரு டிக்கெட் கொடுங்க ஸார்!"

"என்ன? டிக்கட் கிடையாதா? உங்களுக்கு அதைப் பற்றித் தெரியாதா? அப்படியானால் டிக்கட் இல்லாமல்தான் பயணம் செய்ய வேண்டுமா? வண்டி மட்டும் வந்து, நின்று போகுதே! அதுக்கும் உங்களுக்கும் சம்பந்தமே இல்லை என்கிறீர்களே!

"ஏன் சார் இந்த பட்டாபிராம் ஸ்டேசனில் உள்ள ஸ்டேசன் மாஸ்டர்தானே நீங்க! உங்க ஸ்டேசனில் நிற்கும் வண்டிக்கும் உங்களுக்கும் சம்பந்தமே இல்லை என்கிறீர்களே? அந்த வண்டியின் மேல் என்ன கோபம் சார் உங்களுக்கு!"

மேற்கண்ட உரையாடல் கற்பனையல்ல. எனக்கும், பட்டாபிராம் ஸ்டேசன் மாஸ்டருக்கும் நடந்தது தான்.

சென்னையில் இருந்து 7 வண்டிகள் புறப்பட்டு, பட்டாபிராம் வழியாக வந்து நின்று பட்டாபிராம் சைடிங் போய் அங்கிருந்து வண்டிகள் திரும்பி பட்டாபிராம் வழியாக வந்து நின்று, சென்னைக்குப் போகிறது அந்த ஸ்டேசனில் உள்ளவர்களுக்கு சம்பந்தம் இல்லாமல்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் அங்கு வந்து நின்று போகும் இந்த வண்டிகளுக்கு பட்டாபிராம் ஸ்டேசனில் டிக்கெட் கொடுக்கப்படுவதில்லை. காரணம் அந்த ஸ்டாப்பிங் அதிகாரப்பூர்வமாக வரைறுயக்கப் படவில்லை. காலம் காலமாக அந்த வண்டி அங்கு நின்று போகிறதாம். டிரைவர்கள் பொது மக்களின் வேண்டுகோள் படி வண்டிகளை நிறுத்திச் செல்ல, அதுவே பழக்கமாகி, வழக்கமாகிவிட்டதாம்.

எத்தனை பிரயாணிகள் தினம் பயணம் செய்வார்கள்? அநேகமாக ஒரு வண்டிக்கு குறைந்தது 100 பேராவது ஏறி இறங்கி செல்கிறார்களாம்?

www.thamizham.net - Free E Books No TM 14720

அத்தனை பேரிடமும் டிக்கெட் வசூலிப்பது யார்?

பிளாட்பாரமே கிடையாது!

யார் சார்! டிக்கெட் வசூலிக்கப் பேகிறார்கள். காலை 7·30 வண்டியில் பட்டாபிராம் சைடிங்குக்கு செல்லும் வண்டியில் செல்லும் முக்கியப் பயணிகள் யார் தெரியுமா?

4 வயதுக்கும் 15 வயதுக்கும் உட்பட்ட பள்ளிச்சிறுர்கள். அந்த மழலைக் குழந்தைகள் வண்டியில் ஏறத்தவிக்கும் தவிப்பு, பிளாட்பாரம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை சமபரப்பாவது இருக்கவேண்டாமா?

மலையின் உச்சி போன்று ஒரு களிமண் கோபுரத்தின் மேல் அமைக்கப்பட்ட தண்டவாளம் ஆட்கள் இறங்கினுல் நிற்க கூட இடம் இல்லா வழுக்கும் சரிவு! மழைக் காலம் என்ருல் கேட்க வேண்டாம்.

அத்தனைக் குழந்தைகளும் அந்த வண்டியில்தான் செல்ல வேண்டுமா? பின் அவர்கள் படிக்கும் நர்சரி



www.thamizham.net - Free E Books No TM 14720

பள்ளியும், I.A.F. உயர்நிலைப் பள்ளியும் பட்டாபிராம் சைடிங்கில் இருக்கும் போது வேறு வழி?

“கொஞ்சமாவது வசதி பண்ணக் கூடாதா சார்?”

அந்த நிலம் தனிப்பட்டவர்களுக்கு சொந்தமானது. மேலும் இந்த ஸ்டாபிங் ரெயில்வே நிர்வாகத்தால் வரையறுக்கப் பட்டால் தான் பிளாட்பாரம் கட்டலாம். இது பொது மக்கள் சௌகரியத்திற்காக மக்களால் மக்களுக்காக நிறுத்தப்படுகிறது.

ஆமாம்... கையைக் காட்டுங்கள் வண்டி நிற்கும். வேடிக்கையில்லை!

நீங்கள் சற்று வாலிபராக இருந்தால் வண்டி மெதுவாக ஓடிக் கொண்டிருக்கும். உங்களுக்காக. நீங்கள் வண்டி ஏறுவதோ காலை முறித்துக் கொள்ளுவதோ உங்கள் பொறுப்பு.

இது மட்டுமா?

அரசாங்கமே டிக்கெட் இல்லாமல் செல்ல அனுமதிக்கிறது!.

காலையில் இருந்து இரவு வரை பட்டாபிராம் ஸ்டேசனில் இருந்து பட்டாபிராம் சைடிங்குக்கு டிக்கெட்டோ or பட்டாபிராம் சைடிங்கில் இருந்த பட்டாபிராம் ஸ்டேசனுக்கு டிக்கெட்டோ கொடுக்கப்படுவது இல்லை. காரணம் இந்த 14 வண்டிகளும்இங்கு நிற்கத்தான், பயணிகளை ஏற்றி, இறக்கிச்செல்லத்தான், முடியுமே தவிர,நிர்வாகத்தினுல் பயணச் சீட்டு கொடுக்க முடிவது இல்லை.

பயணசீட்டு வேண்டுமா? ஆவடி போய் அங்கிருந்து பட்டாபிராம் சைடிங்குக்கு டிக்கெட் எடுத்துச் செல்ல வேண்டும். அதுபோல் பட்டாபிராம் சைடிங்கில் இருந்து ஆவடிக்குத்தான் டிக்கெட் கொடுக்கப்படும். எந்த முட்டாளும் இப்படி சுற்றி வளைத்து பணத்தை செலவுபண்ணுவாளு?

ஆகவே!

டிக்கெட் எடுப்பதும் இல்லை.!

---

☞ செல்லுமிடமெல்லாம் மக்கள் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் கலை நிகழ்ச்சி நடத்திவரும் இக்குழு மாஸ்கோவின் மிகஇளைய தியேட்டர் கலைக்குழுவாகும்.இவர்கள் அளித்துவரும் இனியஇசையும், பெரிய திட்டமிட்ட அமைப்புடன் திகழும் அருமையான நடனங்களும், பல ரசிகர்களின் பெருமதிப்பை பெற்றுள்ளன. சமீபத்தில் இக்குழுவினர் ஐரோப்பா சென்றிருக்கையில் பாரிஸ், ஜெனோவா, பிரிஸ்ஸல்ஸ், மான்ட்ரியல், வார்சா, ப்ரேக், பெர்லின் ஆகிய நாடுகளுக்கும் லத்தீன் அமெரிக்காவிற்கும், சென்று நிகழ்ச்சி நடத்திய போது, பத்திரிகைகள் பெரிதாக விமர்சித்து பெரிய வரவேற்பை அளித்தன.

ரஷ்ய நாட்டு நடனமான “மெடிலிட்சா” என்பதை இவர்கள் படத்தில் ஆடுகிறார்கள்.

www.thamizham.net - Free E.Books No.TM 14720

சோதனையும் இல்லை. பட்டாபிராமில் இறங்கினால் டிக்கெட் கேட்பாரும் இல்லை!

ரயில்வே நிர்வாகமே பயணிகளை பயணச்சீட்டு இன்றிப் பயணம் செய்யத் தூண்டுகிறது.

பட்டாபிராம் போன்ற சிறிய நகரங்களில் பல வண்டிகள் நின்று, போகும் பொழுது, ரெயில்வே நிர்வாகத்தினரின் கவனக்குறைவால் பொது மக்களின் பணம் விரயமாக்கப் படுவது மட்டுமல்ல, பயணசீட்டு இல்லாமல் செல்ல தூண்டுகோலாக இருப்பது மட்டுமல்ல பயணிகளுக்கும் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகளுக்கும், பெரும் வேதனையாகவும் இருக்கிறது.

இது போன்ற அநாதை ஸ்டேசன்கள் ஒன்றல்ல இரண்டல்ல, பல நூறு இருக்கிறதாம், இந்தியாவில். ரயில்வே நிர்வாகத்தினரால் சரியான நடவடிக்கை எடுக்கப் படாததினால் இது போன்ற ஸ்டேசன் மாஸ்டர் இல்லாத ஸ்டேசன்கள், டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்ய பல நூறு வண்டிகள், பிளாட்பாரங்கள் இல்லாத உயிர் பலி கொள்ளும் சரிவுகள், ஆயிரமாயிரம் இருந்து கொண்டே இருக்கும்.

இதைப் பற்றி இரயில்வே நிர்வாகத்தினர் என்ன சொல்லப் போகிறார்கள்... ...?

With best compliments

from :-

**M. Nainmall Company**

17-B, CHOOLAIMEDU HIGH ROAD

MADRAS—24

www.thamizham.net - Free E Books No TM 14720

இங்கிலாந்து

''இந்த ஆண்டின் ஈடு இணையற்ற காட்சி'

# இளவரசருக்கு ஓர் இனிய விழா!

அவனுக்கென்ன "ராஜா வீட்டுப் பிள்ளை" எதையும் எப்படியும் என்று சாதாரணமாகச் சொல்வது உண்டு. ஆனால் சூரியன் எங்கள் ஆட்சியில் அஸ்தமிப்பதேயில்லை" என்று மார் தட்டி உலகையே கட்டியாண்ட இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் ராஜா வீட்டுப் பிள்ளையான "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" சாதாரணமாக எதையும் செய்து விட முடியாது. அவரது ஒவ்வொரு நடவடிக்கையையும் உலகம் உன்னிப்பாக கவனிக்கிறது. அவர் கண்ணை மறைக்கும் அமெரிக்க மாடல் டைட்டில்ஸ் கிராப் வளர்த்தால் அது பிரிட்டிஷ் நாடாளு மன்றத்தில் ஒரு வினாவாக எழுப்பப் படலாம். அல்லது இங்கிலாந்தின் பெரிய பத்திரிகைகள் முன் பக்க செய்தியாக வெளியிட்டு இதனால் "அரச குடும்ப" கௌரவமே பாதிக்கப்பட்டு விட்டதாக கண்டிக்கப்பட நேரிடலாம்.

அரசியின் மகனான போதிலும், ஒழுங்குக்கும் கண்டிப்புக்கும் பெயர் பெற்ற ஒரு ஸ்காட்டிஷ் பள்ளியில் ஒழுங்காகப் படித்து நல்ல மதிப்-பெண்களுடன் தேறிய இளவரசர் சார்ல்ஸ் ஜீலை மாதம் முதல் தேதி 'வேல்ஸ் இளவரசராக' முடி சூட்டப்பட்டார் 4000 பேர் நேரிலும், பல லட்சக் கணக்கான மக்கள் டெலிவிஷனிலும் கண்டு களித்த இந்த முடிசூட்டு விழா நிகழ்ச்சி 'இந்த ஆண்டின் ஈடு ஈணையற்ற காட்சி'' என வர்ணிக்கப் பட்டுள்ளது.

18 உயர்ந்த கொத்தளங்களைக் கொண்ட "காரன்வாரன்" கோட்டையில் அகன்ற மைதானத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. முதலில் கர்னலுக்கான உடையணிந்து நுழைவாயிலில் நுழையும் இளவரசரை காரன்வான் மேயர் வரவேற்க சிறப்பாயும் சிறுத்தைகள் நான்கை சின்னமாகக் கொண்ட வேல்ஸ் இளவரசரின் கொடி ஏற்றப்படும்




இதற்கிடையில் அரச தம்பதியர் வாயிலில் நுழைவார்கள். பெரும்பாலும் இந்த வாயில் வரை அழகிய கோச்சிலோ அல்லது குதிரையிலோ தான் அரச குடும்பத்தினர் வருவது வழக்கம். ஆனால் இந்தஆண்டு அரசி எலிசபெத்தும் அவரது கணவர் எடின்பரோ கோமகனும் பளபளக்கும் அரச உடைகளுடன் ஒரு புத்தம் புதிய "ரோல்ஸ் ராய்ஸ்" காரில் வந்து இறங்கினர். "அப்பலோ" யுகம் அல்லவா...?

www.thamizham.net - Free E Books No TM 14720

தொடக்கத்தில் சில சம்பிரதாய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிறகு அரியணையில் அமர்ந்திருக்கும் அரசி "ஏரல் மார்ஷல்" என்ற சிறப்பு விருது பெற்ற பிரபுவின் மூலமாக இளவரசரை வரச் சொல்லி 'ஆணை' யிடுவார். இந்த "ஆணை" கிடைத்தவுடன் தனது மெய்க்காப்பாளர்கள் புடைசூழ, வாத்தியங்கள் ஒலிக்க, புறப்பட்டு வலது புறம் திரும்பி மைதானத்தின் நடுவழியாக செல்வார். இந்த சமயத்தில் அவரது மெய்காப்பாளர்களில் இருவர் வேல்ஸ் இளவரசருக்கான விசேஷ சின்னங்கள் அணிந்திருப்பார்கள். இவர்களுடன் பிரிட்டிஷ் அரசு சார்பாளராக அரசாங்க காரியதரிசியும் உடன் செல்வார். அரசியின் முன் நிற்கும் இளவரசர் மரபின்படி இடுப்பு வரை தாழ்ந்து மூன்று முறை வணங்குவார்.

பின்னர் சில அடிகள் இளவரசர் மட்டும் நடந்து அரியணைகளுக்கு முன் போடப் பட்டிருக்கும் முழந்தாளிடும் மேடையில் முழந்தாளிட்டு நிற்பார். வேல்ஸ் பகுதி காரியதரிசி வேல்ஸ் மொழியிலும் இங்கிலாந்தின் அரசாங்க காரியதரிசி ஆங்கிலத்திலும் இளவரசர் "வேல்ஸ் இளவரச"ருக்கான அரசியல் பிரகடனத்தைப் படிப்பார்கள். இது படிக்கப்படும் பொழுதே அரசி அந்தந்த இடங்களில் சொல்லப் பட்டிருப்பதற்கேற்ப இலச்சனைகளை அணிவிப்பார். இறுதியாக அரச குடும்பத்திற்கான வாளை அணிவித்து கையில் செங்கோலைத்தந்து விரலில் ஒரு மோதிரத்தை அணிவிப்பார் இந்த மோதிரம் அணிவதற்கு மன்னரை மக்களுக்கு மணமுடிக்கப் பட்டிருக்கிறது என்று பொருள். மன்னனின் முதல் மனைவி நாட்டு மக்கள் தானே!

பிறகு விழா சிறப்பு அம்சமான 'மகுடம் சூட்டுதல்' நடைபெறும். 3 பவுண்டு எடையுள்ள இந்த மகுடத்தில் 75 வைரங்களும், 12 மரகதங்களும் திக்கப்பட்டுள்ளன. இதுவரை வேல்ஸ் இளவரசர்களுக்கு சூட்டப்பட்ட வைகளைவிட இவ்வாண்டு சூட்டப்பட்டதே விலையுயர்ந்ததாம் மகுடம் அணிவிக்கப்பட்ட இளவரசர் முழந்தாளிட்டபடியே தனது வலது கரத்தை நீட்டி, தனது "இறுதி மூச்சு உள்ளவரை" தனது ஒவ்வொரு செய்கையாலும் அரசிக்கு விசுவாசமுள்ள ஊழியனாகப் பணி செய்வேன்" என்று உறுதி மொழியளிப்பார். இந்த உறுதிக்கு பிறகு அரசி அவரது கைகளைப் பற்றி எழுப்பி, நெற்றியிலே ஒரு முத்தம் தந்து. அருகில் இருக்கும் அரியணையில் அமரச் சொல்வார். அந்த நிமிடம் முதல் அவர் "வேல்ஸ் இளவரசராவார்" பின்னர் அரசர் அரியணை



மகுடம் பெறப் போகும் வேல்ஸ் இளவரசரை அழைத்துப் போக காத்திருக்கும் அரச தூதுவர்கள். அவர்களுப் பின்னால் இளவரசுக்கு சொந்தமான கொடி

www.thamizham.net - Free E Books No TM 14720

ஏறுவற்தான தருதிகளில் ஒன்றான வேல்ஸ் மொழியை கற்ற வேல்ஸ் பல்கலைக்கழகத்தலைவர்; மக்கள் சார்பாக ஒரு விசுவாச உரையை இளவரசருக்கு வாசித்தளிப்பார். அதற்கு இளவரசரும் வேல்ஸ் மொழியிலேயே பதிலளிப்பார்.

இது முடிந்த பிறகு புதிய இளவரசரின் ஆட்சி துவங்கியதற்கு நன்றி தெரிவித்து இறைவனுக்கு காலரில் உள்ள மக்களும் கலந்து கொண்டு வணக்கம் செலுத்துவார்கள் வழிபாட்டுக்குப் பின் மகுடம் தாங்கிய இளவரசரும் அவரது பெற்றோரும் மக்கள் வரிசைகளைக் கடந்து பவனியாக வெளி வாயிலை அடைவர். அப்பொழுது மக்கள் 'கடவுள் எங்கள் இளவரசருக்கு அருளட்டும்'' என்ற கீதத்தை இசைப்பார்கள்.

ஏறத்தாழ விழா இத்தோடு முடிந்து விட்ட மாதிரி தான் "இளவரசரை மக்களுக்கு அளிப்பது'' என்பது அது ஒவ்வொரு அரசரும் அல்லது அரசியும் தனக்குப் பின்னர் வரப்போகும் வாரிசை மக்கள் முன்னிலையில் காட்டி விரைவில் "வேல்ஸ் இளவரசாக்குகிறேன்'' என்று உறுதியளித்திருப்பார்கள் அந்த வகையில் அரசி எலிசபெத்தும் 1958ம் ஆண்டில் இளவரசர் சாலர்சுக்கு 9 ஆண்டுகள் இருக்கும் பொழுது இதே கோட்டையில் கவர்ச்சி மிகு' விழா வொன்றில் கணவர் பிலிப் உடன் வர இளவரசர் சார்லசை கையைப் பிடித்து கம்பீரமாக அழைத்து வந்து கோட்டையின் உப்பரிகை ஒன்றிலிருந்து இந்த உறுதியை அளித்தார் புரிந்தும் புரியாமலும் இருந்த சார்லசும் கைகளை ஆட்டி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்தான் இந்த வாக்குறுதியை நிறை வேற்றும் பொருட்டு அரசி வேல்ஸ் இளவரசை "கிங்ஸ் கேட்வே'' என்ற மாயில் வரை அழைத்துச் சென்று ரக்களுக்கு "அளிப்பார்'' இருபுறமும் எண்ணற்ற மக்கள் கூடியிருக்கும் அந்த வாயிலில் இளவரசர் விண்ணதிர வாழ்த்தொலி முழங்க சிறப்பாக வரவேற்கப்படுவார்.


பின்னர் அரச குடும்பத்தினரும் மற்ற விருந்தினர்களும் காத்து நிற்கும் அவரவர் கார்களில் ஏறிக் கொண்டு படைகள் முன் செல்ல பரிவாரங்கள் பின் தொடர "காரன்வான்'' நகரை "ராஜபவனி'' யாக வலம் வருவார்கள். இந்த பவனியுடன் "குட்டி முடி சூட்டு விழா'' நிறைவடைகிறது.

நன்றி : B. I. S,

முயற்சி ; மாலன், ரமணன்

(செயற்குழு)

---



கணித ஆசிரியரிடம் மாணவன்: செய்யாத தவறுக்கு தண்டனை உண்டா சார் ?

ஆசிரியர்: நிச்சயம் கிடையாது

மாணவன்: நீங்கள் நேற்றுக் கொடுத்த வீட்டுப் பாடத்தை செய்யவில்லை சார்?

ஆசிரியர்: ? ? !

நெல்லை ஆறுமுகம்
இந்து கல்லூரி

www.thamizham.net - Free E Books No TM 14720

உலகின் மீது அக்கறை இல்லையா ?

சோகை நோயா ?

குழந்தையின் எடை அதிகரிக்க வேண்டுமா ?

குளிர் வேண்டுமா ? குளிருக்கு அடக்கம் வேண்டுமா ?

# நிறங்கள் உங்களை மாற்ற முடியும் !

லெவ் மெல்நிக்கோவ்

ஒளிப்பட்டையின் பல்வேறு நிற மாலைவண்ணங்களும் மனிதர்களின் உடலியல், உளவியல் இயக்கங்களைப் பாதிக்கின்றன என்று சோவியத் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். சிவப்பு, நீல வகையைச் சேர்ந்த நிறங்கள் ஒருவகை விளைவையும் பிற நிறங்கள் வேறு விளைவுகளையும் தோற்றுவிக்கின்றன என்பது அவர்களது கருத்து

சிவப்பு, தசை விறைப்பை அதிகரிக்கிறது. இருதயத் துடிப்பையும் சுவாச லயத்தையும் இரத்த அழுத்தத்தையும் அதிகரிக்கிறது பொதுவாக அவனை அது ஊக்குவித்து அவனது உளப்பாங்கையும் சீர்படுத்துகிறது, தன்னைச்சுற்றியுள்ள உலகின் மீது அவன் அதிக அக்கறை காட்டுகிறான்.

சிவப்பு வண்ண சிகிச்சை சோகையுள்ள குழந்தையைச் சீராக்குகிறது இரத்தச்சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. குழந்தையின் எடையும் அதிகரிக்கிறது.

நிற மாலையின் மற்றொரு ஓரத்தில் உள்ள கருநீலம் மென்நீலம் போன்றவண்ணங்கள் சிவப்புக்கு மாறான விளைவுகளை தோற்றுவிக்கின்றன. அந்த நிறங்கள் இரத்த அழுத்தத்தையும் சுவாச லயத்தையும் இருதயத்துடிப்பையும் குறைக்கின்றன. தவிர உளபாதிப்பு கொண்ட நோயாளிகள் நீலநிற ஒளியுள்ள அறைகளில் சற்று நிதானம் பெறுகின்றனர்.

ஒரு விருந்தினரை உபசரிக்கும் போது தகுந்த நிறமுள்ள பொருட்களை நாம் தேர்ந்தெடுக்கிறோம் அல்லவா? விருந்து சிறப்பதும், சீர்கெடுவதும் இந்த வண்ணங்களினால் கூட இருக்கக்கூடும் என்பதை ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. சிற்றுண்டிச்சாலையில் வெள்ளை நிற ஒளி உண்பவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. உணவின் இறுதியில் ஆரஞ்சு நிற ஒளி [illegible]களுக்கு ஒரு புத்துணர்வை அளிக்கிறது. [illegible]தமான நிறமும் ஒரு மனிதனுக்கு எரிச்சலை உண்டாக்கக்கூடும். [illegible]ரண ஓய்வு மன அமைதி பெற வண்ணங்கள் மாறுதல் அவசியம். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு ஏற்படும் மாற்றம் நரம்பு மண்டலத்திற்கு நல்ல இதமளிக்கிறது. களைப்பைப் போக்குகிறது. வெப்ப' அல்லது' 'குளிர்' நிறங்களைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஆம், மஞ்சள் நிறம் வெது வெதுப்பைத்' தருகிறது. நீல நிறம் குளிரை' தோற்றுவிக்கிறது.

நமது அறையின் சுவர்களில் அடிக்கப்பட்டுள்ள நிறத்தை பொருத்து அந்த அறையின் அளவுகூட மாறியதாகத் தோற்றமளிக்கும். ஒரு அறையில் சிவப்பு. ஆரஞ்சு. மஞ்சள் நிறம் அடிக்கப் பட்டிருந்தால் அவ்வறை சிறியதாகவும், நீலம், பச்சை. வயலெட் நிறம் அடிக்கப்பட்டிருந்தால், அந்தஅறை, பெரியதாகவும் தோன்றுகிறது.

நன்றி : 'சோவியத்'

www.thamizham.net - Free E Books No TM 14720

வானவியல் :

# சூரியனைப் பற்றி சில திடுக்கிடும் தகவல்கள்.

—ஆண்டுரு H. பாலன் தாஸ், பி.எஸ்ஸி (பி டி )
ஆசிரியர் கல்லூரி, வேலூர்

வானத்தில் நீந்திவரும் ஏறக்குறைய 1,00,000 கோடி விண்மீன்களில் சூரியன் ஒன்று! சூரியன் தான் மிகப் பெரிய விண்மீன் என்று நினைப்பது தவறு. அண்டாரிஸ் என்னும் விண்மீன் சூரியனைப் போல 36கோடி மடங்கு பெரியது ரீகல் என்னும் விண்மீன் சூரியனைப் போல 15 000 மடங்கு பிரகாசமுள்ளது.

சூரியனில் ஒளியும் வெப்பமும் எப்படி உண்டாகின்றன? சூரியனில் அதிகமாக நிறைந்திருப்பது ஹைட்ரஜன் அணுக்களும் அதற்கு அடுத்தபடியாக ஹீலிய அணுக்களும் தான் இதிலுள்ள ஹைட்ரஜன் அணுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இணைந்து ஹீலிய அணுக்களாக மாறுகின்றன இந்த இணைப்பின் போது மாற்றம் ஏற்பட்டு ஏராளமான அணுசக்தி வெளிப்படுகிறது. ஆயினும் சூரியனிடமிருந்து வெளிப்படும் சக்தி, மனித உடலிலிருந்து வெளிப்படும் சக்தியைக் காட்டிலும் பல மடங்கு குறைவாகத் தான் இருக்கின்றது மனித உடல் ஒரு பவுண்டுக்கு ஒரு நாளைக்கு 10கலோரி சக்தியை வெளிப்படுத்துகின்றது. ஆனால் சூரியனோ ஒரு பவுண்டுக்கு ஒரு நாளைக்கு இரண்டு கலோரி சக்தியைத் தான் வெளிப்படுத்துவதாகக் கணக்கிட்டிருக்கின்றார்கள்.

பூமியிலிருந்து 98கோடி மைல்கள் தூரத்தில் உள்ள சூரியனில் பூமியைப்போல 1.3 கோடி பூமிகளை அடக்கலாம். சூரியனுடைய சுழற்சி கிழக்கு மேற்காக உள்ளது. இதில் வியப்பு என்ன வென்றால் முழு கோளமும் ஒரே சமயத்தில் சுழன்றாலும் மத்தியப் பகுதி ஒரு சுற்றுசுற்று வதற்கு 25 நாட்களும், முனைப் பகுதிகள் ஒரு சுற்று சுற்றுவதற்கு 34 நாட்களும் ஆகின்றன.

சூரியனில் நீந்திக்கொண்டிருக்கும் ஹைட்ரஜன் அணுக்களின் இணைப்பினால் உண்டாகும் சக்தி நடுப்பாகத்திலிருந்து உந்த சூரியன் விரிவடைந்துக் கொண்டே செல்லும். கடைசில் ஒரு நாள் மிகப் பெரிய கோளம் என்று சொல்லப்படும் அண்டாரிசுக்கு சமமாக மாறிவிடும். அப்போது அதன் சக்தி அண்டைக் கோளங்களான மெர்க்குரி. வீனஸ், பூமி, மார்ஸ் முதலியவைகளை அழிக்கும் தன்மை கொண்டதாக இருக்கும். ஆனாலும் இந்நிலை ஏற்பட இன்னும் 5000 கோடி வருடங்கள் ஆகுமாம்.

இதன் பிறகு ஹைட்ரஜன் அணுக்கள் படிப்படையாக ஹீலிய அணுக்களாக மாறிவிடும். பின் ஹீலிய அணுக்களின் குணப்படி சூரியன் படிப்படியாக சுருங்கி பூமியை விட சிறிய கோளமாக மாறிவிடும். அதன் பின் விளைவுகள் என்ன? அதனை நம் சந்ததியார்கள் காண்பார்களாக.

—o—

**மௌனமே சில வேளைகளில் கடுமையான விமர்சனமாகி விடுகிறது**
—யாரோ

www.thamizham.net - Free E Books No TM 14720

# தென்றல் ஓசை

## அத்தியாயம் 14

காஷ்மீரத்திலிருந்து திரும்பி வந்து சென்னையில் காலடி வைத்ததும், சொந்த ஊருக்குத் திரும்பிவிட்ட மகிழ்ச்சியில் உடல் புல்லரித்தது. நடுக்கும் குளிருக்குச் சால்வையைத் தேடுகிற தொந்தரவு இல்லை. கோதுமைப் பண்டங்களுக்கு நடுவே அரிசிச்சோற்றுக்காக ஏங்குகிற ஏக்கம் இல்லை. தமிழும், ஆங்கிலமும் கூடத் தெரியாதவர்களிடம், கையசைவில்பேசிக் காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டிய சங்கடமும் இல்லை.

ஆனால் கூடவே அந்தக் காட்சிகள் கனவாய் மிதந்து வந்தன. அந்த இரண்டு மாதங்களும் வந்து அலை மோதின. வண்ணம் வண்ணமாகப் பூத்துச் சொரிந்த மலர்கள்; பட்டிலும் மென்மையான சால்வை; நீர்ப் பரப்பில் சிலிர்த்தெழும் பறவையைப்போன்ற படகு வீடுகள்; முகத்திரை அணிந்து உடலைமுடி, முகம் கூடத் தெரியாமல் தெருவில் நடந்து செல்லும் காஷ்மீரத்துப் பெண்கள்; இலைகளுக்கிடையே மாங்கனி தெரிவது போல எப்போதேனும் திரை விலக்கில் பளீரென ஒளிவீசும் அந்த அழகு முகம்...

அந்த அனுபவம் இனி அவனுக்கு இல்லை. இன்னொரு தடவை நளினாவுடன் போகவா? அந்தத் தடவை உணர்ந்ததுபோன்றவேதனைகளுக்கு இடம் கொடுக்கவா? இரண்டும் வேண்டாம்.

மணிக்கென்று சில பொம்மைகளை வாங்கி ஒரு பெட்டியில் வைத்துக் கட்டாயமாக அனுப்பி இருந்தாள் நளினா. அவற்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனான். குழந்தையைப் பார்த்து எவ்வளவு நாட்களாயிற்று? மாதக் கணக்கில் ஆகி இருக்கும். ஆனாலும் அதற்காக அவன் மனத்தில் தாகம் ஒன்று மில்லை, அவ்வளவு நாட்களுக்குப் பிறகு தன் வீட்டு வாசலை மிதிக்கும் நெஞ்சக் கிளர்ச்சியும் இல்லை.

முன் அறையில் நாற்காலியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தாள் ராதை. கீழே தரையில் அமர்ந்து, உடலை வளைத்து சிலேட்டின் மேல் கவிழ்ந்து எழுதிக் கொண்டிருந்தான் மணி. அவனைப் பார்த்ததும் கைப் புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு எழுந்து நின்றாள் ராதை. அவள் பார்வையில் அடையாளம் இல்லை. முகத்தில் சிறிதளவு மாறுதலும் இல்லை. வீட்டிற்கு வரும் அறிமுகம் இல்லாத விருந்தாளியை வரவேற்கும் ஒதுக்கம் தான் தெரிந்தது.

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

www.thamizham.net - Free E Books No TM 14720

அவள் ராதை அல்ல. அவன் அறிந்த ராதை அல்ல. உடலை எதிலோ போட்டு நெருக்கி, உருட்சியைப் போக்கி, உயிரையும் ஒளியையும் பலகையாக அடித்து விட்டது போல இருந்தது. உடலில் வளைவுகளுக்கும் குழைவுகளுக்கும் பதிலாக, இப்போது வெறும் கோடுகளும், மெலிவின் பள்ளங்களும் தான் கண்ணை உறுத்தின. கண்களில் தான் எத்தனை ஆழ்ந்த குழிவு? எந்த வேதனை அவளை அப்படி உருக்குகிறது. அவன் அறியாததா?

மணி எழுந்து ஓடி வந்து கழுத்தைக் கட்டிக்கொண்டான். வெகு நாட்களுக்குப் பிறகு அவனைப் பார்க்கும் மகிழ்ச்சி. அவனைத் தொட்டுப் பார்ப்பதிலேயே அலாதியான மனக்கிளர்ச்சி கிடைத்து விடும்போல இருந்தது குழந்தைக்கு. ஆசையின் கொஞ்சலில் சொற்கள் குழறின.

"ஊருலேருந்து இப்பத்தான் வர்றியா? எனக்கு என்ன வாங்கிக்கொண்டு வந்தே?"

கைப்பெட்டியைப் பிடுங்கினன் அவன். குரலில் அவசரம் துள்ளிவிளையாடிற்று. அவன் கையைப் பிடித்து இழுத்து நாற்காலியில் உட்கார வைத்தான். கால் செருப்பைத் தொள தொள வென்று தன் சிறியகாலில் போட்டுக்கொண்டு அறைமுழுவதும் நடை போட ஆரம்பித்தான்.

"உட்காரேன் ராதை."

"இருக்கட்டும்"

குரல்கூடக்கணீர் என்று இல்லை; கம்மிப்போய் எங்கிருந்தோ பேசுவது போன்ற மெலிவும் தேய்வும். 'ஏன் இப்படி?' என்று கேட்க அவனுக்குத்துணிவில்லை. அவளிடம் தன் உதாசீனத்தின் நிழலையே பார்ப்பது அவனுக்குப் புரியாததா?

---

**தலைகீழாக நடந்து விடக் கூடாதே என்பதற்காகத் தான் மனிதனுக்குத் தலை மேலே உள்ளது.**

—டால்ஸ்டாய்

---

சட்டேன்று அவள் நாற்காலியில் உட்கார்ந்து முகத்தைக் கைகளால் தேக்கிக்கொண்டு அழ ஆரம்பித்தாள். தோள் வளைவுகள் உள் துடிப்பில் குலுங்கின. மௌனக்கண்ணீரில் புறங்கை ஈரங்கண்டது.

"என்ன ராதா? என்ன நடந்தது?"

மணிதான் ஓடிவந்து மடிமீது உட்கார்ந்து கொண்டான். "தங்கச்சிப் பாப்பாவுக்கு ரொம்ப ஜுரம். அம்மா அஞ்சுநாளா தூங்கவே இல்லை. டாக்டர் வந்து ஊசி போட்டார். இன்னிக்குத் தான் தேவலாம். உள்ளே போய்ப் பாரு."

மணி அவன் கையைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு போனன். தொட்டியில் குழந்தை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. ஜுரம் அடித்த வேகத்தில் உடலும் முகமும் வெளுத்துப் போயிருந்தன. துணிச் சுருளுக்கு நடுவே மெலிந்த கை வெளியே நீண்டு துவண்டு கிடந்தது. அந்தக் காட்சியில் நெஞ்சில் ஒரு முள் நெருடிற்று.

ராதை அவன் பின்னே எழுந்து வரவில்லை. இன்னும் அவள் அங்கேயே உட்கார்ந்து அழுது கொண்டு தான் இருந்தாள். அவன் தன் கடமையைச் செய்யவில்லை. அந்த வீட்டில் ஐந்து நாட்களாக சிறு புயல் புகுந்து விளையாடி அலைக்கழித்து விட்டுப் போயிருக்கிறது. அவன் அவளுக்கு கொஞ்சம் மனத் தெம்பு கொடுக்கக்கூட உடன் இல்லை. அவள் தனியேநின்று சமாளித் திருக்கிறள் எப்படியோ அதைக் கடந்து மீண்டு

www.thamizham.net - Free E Books No TM 14720

## இலக்கணம் மாறிவிட்டதய்யா!

பூச்செண்டு ஏப்ரல் இதழ் பக்கம் 46ல் மார்பின் இலக்கணம் பற்றி கே. இராதா அவர்கள் சங்க காலத்திலிருந்த ஆண்களின் மார்பில் ஒரு பெண் ஒருமுறை புரளமுடியுமளவுக்கு அகன்றதாக இருந்தது என்று எழுதியிருந்தார். அச்சங் காலத்தே இருந்த பெண்கள் கொடியிடை உடையவர்களாக இருந்ததினுல் அவ்வாறு புரளமுடியாது. ஆனுல் இன்றுள்ள பெண்களோ பிடி (யானை) இடையை உடையவர்கள் என்பதால் புரள முடியவில்லை என்பதை மறந்தே போய் விட்டார் போலும் எழுதியவர்

—வியந்ததைப் படித்து அதிர்ந்தவர்
வடிவேல்
மதுரைக் கல்லூரி

---

விட்டசலிப்பில் இப்போது அவள் தன் வேதனையில் புரண்டு கொண்டிருக்கிருள்.

இதுவரை அதை அவள் அவனிடம் சொல்ல வில்லை. இடித்துக் காட்டவும் நினைக்கவில்லை. அவனை வருத்த வேண்டாம் என்ற நினைப்பா? அல்லது அதில் இனிப் பயன் இல்லை என்று முடிவு செய்து விட்டாளா?

குளித்து சாப்பிட்டு, அறைக் கட்டிலில் படுத்து அயர்வு தீர உறங்கினுன். எழுந்திருக்கும் போது மணி நான்கு. மஞ்சள் வெய்யில் காண ஆரம்பித்து விட்டது. தரை முழுவதும் பொம்மைகளை இறைத்து விட்டு மணி வாசலில் விளையாடப் போய் விட்டான்.

முகத்தைக் கழுவி உடையை மாற்றிக் கொண்டான். அவன் முன் புறம் வந்த போது ஆவி பறக்கும் காப்பி காத்திருந்தது. ஏதோ காரியமாக அந்தப் பக்கம் வந்தவளிடம் "கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டான்.

அவள் பதில் சொல்லவில்லை. அனல் பட்ட பூவாக வாடிக் கிடந்த முகம். அந்த நெஞ்சினுள் வறளக் காய்ந்த உறுதியா?

அந்தி இருள்கவிய ஆரம்பித்து விட்டது. டாக்ஸி கோடம்பாக்கம் மேம்பாலத்தைக் கடந்து கொண்டிருந்தது. மக்கள் நடமாட்டத்தின் ஓயாத, தனித்தனியாக சப்தங்கள், புரியாத இரைச்சல் இயங்கிற்று. பாலத்தின் இறக்கத்திலிருந்து எழும்பினுற் போலத் தெரியும் வான விளிம்பு; தகட்டின் அடிப் பக்கம் போல மங்கிய ஒளி விட்டுக் கொண்டிருந்தது. "பாலத்தின் அடியில், தண்டவாளம் விரிந்த பாட்டையின் கரைகளில், இயங்கின உலகமே வேறு தான்.

புகை சுருண்டெழும் குடிசைகளின் கூரைகள். திறந்தவெளியில் அம்மியில் அரைத்து, காய்கறி நறுக்கிச் சமைக்கும் காட்சி. பொதுக் குழாய


www.thamizham.net - Free E Books No TM 14720

டியில் பெண்களின் சண்டைகளில் ஒருவருக் கொருவர் வேகமாய் வாய் மாறும் வசை மொழிகள் வெடித்துத் தெளிந்தன.

அவன் முகத்தைத்திருப்பிக் கொண்டான். அது காஸ்மீரத்துக் காட்சி அல்ல; கண்குளிரப் பார்ப்பதற்கு. வெண் திரையில் தோன்றும் பொய்ம்மையும் அல்ல; புனைந்த அழகில் மனம் விட்டுநிற்பதற்கு. இது புனைவும் அலங்காரமும் இல்லாத வறட்டு இயற்கைத்தோற்றம் அந்த உண்மையை அப்படியேபார்க்கும் நெஞ்சுத்திடம் அவனுக்கு இல்லை.

டாக்ஸி ஸ்டுடியோவிற்குள் நுழைந்தது. அன்று அவனுக்குத் திட்டமான வேலை ஏதும் இல்லை. அவனுடைய மனத்தில். ஒரு தீர்மானத்தை உருவாக்கிக் கொண்டு அவன் வந்திருந்தான். புதிதாகத் தோன்றி, புகழும் பாராட்டும் பெற்றிருந்த இயக்குநர் சந்தானம் அன்று அங்கேவர இருப்பது அவனுக்குத் தெரியும். அவரைச் சந்திக்கலாமென்று தான் வந்திருந்தான்.

அவனுக்குச் சற்று முனபு திரை உலகத்தில் காலடி எடுத்து வைத்தவர்தாம். மளமள வென்று புகழின்



“கால் செருப்பைத் தொள தொள வென்று தன் காலில் போட்டுக் கொண்டு அறைமுழுவதும் நடைபோட ஆரம்பித்தான்’

www.thamizham.net - Free E Books No TM 14720

படிகளில் மேலே ஏறிவிட்டார். அவ னுடைய வயது தான் இருக்கும். இப்போது சேர்ந்தாற் போல பத்து படங்களுக்கு அவர் பொறுப்பு. டயிரியில் அடுத்த ஒரு ஆண்டுக்கு இடம் இல்லை.

முற்போக்கான கொள்கைகள் உள்ளவர்; புதிய கருத்துக்களைப் புகுத்துபவர்; புதிய நட்சத்திரங் களைத்தோற்றுவிப்பவர். இப்படி எல்லாம் சந்தானத்துக்கு ஒரு பெயர் உண்டு. அண்மையில் பொன்னுடை போர்த்திப் பட்டமும் கூட வழங்கி இருந்தார்கள்.

அவனுக்கும் அப்படி ஒரு அபிப்பிரா யம் அவரைப்பற்றி உண்டு. அவனி டமே அவர் கதை எழுதித் தரச் சொன்னதுண்டு. ஏனோஇருவருக்கும் அதற்கு உரிய வாய்ப்பு கிடைக் காமல் போய்விட்டது. அன்று அவரி டம் அதைப்பற்றிப் பேசலாம் என்று தான் வந்தான்.

இரண்டு செட்டுகளில் வேலை முடிந் து. இவர் வெளியே வர இரவு மணி ஒன்று ஆகிவிட்டது. அவனைக் கண் டதும் கையைத் தூக்கிப் புன்னகை செய்தார் சந்தானம். வெளியே காரில் ஏறப் போனவருடன், கூட நடந்து போனான். காரின் கதவைத் திறந்து படியே காலை வைத்தவர் அவன் வருவதைக் கண்டதும் ஏறா மல் நின்றார்.

"என்ன வேணும் அண்ணு"

அவன் வயதில் அதிகம் பெரியவன் இல்லை. ஆனாலும் அப்படித் தான் சுந்தரம் அழைப்பது

"கொஞ்சம் பேச வேண்டும்."

"காரில் ஏறுங்களேன். பேசிக் கொண்டே போகலாம்."

அவன் சற்றுத் தயங்கினான்.

---

நிலையான, ஆனால் எளியதொரு வேலை மனிதனுக்கு இருப்பதற்கா கவே அவனுக்கு ரோமமும் நகங்க ளும் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

---

"வேறொன்றுமில்லை. ராஜினி ஸ்டுடியோ வரையில் போக வேண் டும். அங்கே ஒரு 'செட்' வேலை பாக்கியிருக்கிறது. கூடவந்தீங்க ளென்றால் பேசிக் கொண்டே போ கலாம்..."

"இல்லா விட்டால் அப்புறம் பார்க்கலாம்." என்று சொல்லாமல் சொல்லுவார்கள் அத்தனை அவசர மா? அல்லது அக்கரை இல்லையா?

பதில் ஏதும் சொல்லாமல் ஏறிப் பக்கத்தில் உட்கார்ந்தவுடன் கார் புறப்பட்டது.

"உங்களிடம் ஒன்று கேட்கலா மென வந்தேன்."

"கேளுங்களேன்" என்று சிகரெட் டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். ஆசையாக ஒரு முறை இழுத்து விட்டு அவன் புற மாக பெட்டியை நீட்டினார். சுந்த ரம் வாங்கிக் கொள்ளவில்லை. அவ னுக்கு அந்த சமயத்தில் அதில் ஈடு பாடு இல்லை. எண்ணங்களின் வே கம்தான் தொற்றிக் கொண்டு வந் தது.

"நல்ல கருத்துள்ள கதை, இலக் கிய மணம் கமழும் வளமான கற் பனை, இவைகளோடு நடிப்பில் மேன் மையும், காப்பி கொஞ்சம் கூட இல்லாமல், கண்ணியமான உடை அமைப்புக்கு ஒரு படம் பிடிக்க வேண்டும். முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?"

www.thamizham.net - Free E Books No TM 14720

## பிளாஸ்டிக் கப்பல்

● கொடி மரம் மற்றும் ஒரு சில பாகங்களைத் தவிர, கப்பல் முழுவதும் "பாலிஸ்டர்" என்னும் பிளாஸ்டிக்கினால் தயாரித்திருக்கிறார் ஒரு ஜெர்மன் நிபுணர். 16 மீட்டர் நீளமுள்ள இந்த கப்பல் 25,000 டாலர் செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் இவை 35,000 டாலர் விலைக்கு கிடைக்குமாம். யு. பி. எஸ்.

"முடியலாம்—"

"முடியும்" என்று சொன்னால்? ஒருவரைப் போல ஒரு முயற்சியில் ஈடுபடுவீர்களா சொல்லுங்கள். உங்களைப் போன்ற இயக்குனர்கள் செய்ய முன் வரவில்லை என்றால், வேறு யாரும் அப்படி செய்ய முடியாது."

"சுந்தரம்" என்று அவன் மடிமீது கையை வைத்தார் சந்தானம் "உங்கள் திட்டம் தான் என்ன? கையில் படம் எடுக்கும் அளவுக்குப் பணம் சேர்ந்து விட்டதா? அல்லது என்னை கூட்டுசேர அழைக்கிறீர்களா?"

"இரண்டும் இல்லை. உங்களையே அப்படிப் படம் எடுக்கச் சொல்கிறேன். எனக்குப் பணம் கூட வேண்டாம் அதற்கு."

அவர் பதில் பேசவில்லை. சிகரெட்டின் நுனித்தால் மின்னிற்று.

"முடியாது என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள்." அவன் குரல் இறுகிற்று. நான் உங்களையே மிகவும் நம்பி வந்திருக்கிறேன். அந்த தைரியமும் துணிவும் உங்களுக்குத்தான் உண்டு."

சுந்தரம் சிகரெட்டை வெளியே எறிந்து விட்டு அவன் முதுகில் தட்டிக் கொடுத்தான். நள்ளிரவு நேரம் அமைதியில் ஒதுங்கிய உலகம். விளக்குகளின் ஒளி, கார் செல்லும் போது மாறி மாறிக் கோலமிட்டது.

"என்னுடைய வீடு, கார் இவைகளை யெல்லாம் வேண்டுமானால் விற்று விடலாம். அந்தப் பணத்தை இதில் முதலீடு செய்யலாம். இது என் துணியாத ஆவல் பத்து நாட்களாக இதற்கு உரிய கதை என் மனத்தில் வடிவம் எடுத்துக் கொண்டிருக்கிறது." அவன் அக்ந்தையெல்லாம் அந்தக் கண்ணீர் துளியில் கரைந்து மறைவது போல இருந்தது. அவர் சிரித்துக் கொண்டார்.

இந்தக் காரியத்தில் உணர்ச்சி வசப்பட்டு பயன் இல்லை மிஸ்டர் சுந்தரம். நிதானமாக ஆலோசித்துப் பொறுத்துச் செய்யலாம். என் கையில் இப்பொழுது பத்துப் படங்கள் இருக்கின்றன. அதில் இரண்டு இந்திப் படங்கள். பிரமாதமாக ஓடியதைத் தமிழில் மறுபடி எடுப்பது. நான்கு மலையாளக் கதையின் தமிழ்ப் படப்பிடிப்பு மற்றவை ஆங்கிலப் படங்களின் சிலவற்றிலிருந்து, நாமாக சேர்த்துதான். சேர்த்துக் கொண்டால் தமிழிலேயே கற்பனை வடிவாக ஒன்று கூட இல்லை."

"ஏன்? தமிழ் எழுத்தாளர்களுக்கு அத்திறமை இல்லையா?"

www.thamizham.net - Free E Books No.TM 14720

"திறமை இருக்கிறது. ஆனால் அதன் வெற்றியில் தயாரிப்பாளர்களுக்கு அதிக நம்பிக்கை இல்லை. இருந்தாலும் அதைக் காட்டிலும் இதைப் போன்ற முயற்சிகள் எளிதில் அதிக லாபம் கிடைக்கலாம் என்று நினைக்கிறார்கள். ஒன்று வைத்துக்கொள்ளுங்கள் மிஸ்டர் சுந்தரம்! மற்றவைகளைப் போல இதுவும் ஒரு வியாபாரம். இழப்பு நேர்தாலும் பரவாயில்லை என்று பொறுத்துத் தொண்டில் ஈடுபட இங்கே யாரும் தயாராக இல்லை... மன்னிக்கவும். நானும் அதில் சேர்ந்தவன் தான்,"

"அப்போது நான் கேட்டது?"

"இப்போது அதற்கு அவகாசம் இல்லை. அவசரமும் இல்லை. ஒரு இரவில் மூன்று கொலைகள் நிகழுகிறது. அவற்றைச் செய்தவன் ஒருவனே. குற்றவாளியைக் கண்டு பிடிக்க துப்பு துலங்கி மூன்று நாட்களில் அவன் பிடிபடுகிறான். இதில் நடுவே, காதல், தாய்ப்பாசம், டான்ஸ், ஓடும் ரயிலில் சண்டை, காரில் துரத்துவது. ஆஸ்பத்திரி சீன் இவ்வளவும் அமைய வேண்டும். புது முகங்களை போட்டு, குறுகிய காலத் தயாரிப்பாக மூன்று மாதங்களில் முடிக்க வேண்டும். செட்டியார் இப்படி ஒரு சிக்கலை என்னிடம் கட்டிவிட்டிருக்கிறார். அவருடைய வர்ணப் படத் தயாரிப்புக்கு இதிலிருந்து முதல் தேவை. நீங்கள் இதற்குக் கதை வசனம் எழுத முடியுமா சொல்லும். இப்போதே நான் பேசி 'அட்வான்ஸ்' வாங்கிக் கொடுத்து விடுகிறேன்."

இதைப் போல எத்தனை தடவைகள், ஒவ்வொரு படியிலும், அவனுக்கு அழைப்புக்கள் வந்தன? எவ்வளவு பேர் 'அட்வான்ஸ்' தொகை கொடுத்திருப்பார்கள் ஒவ்வொரு படியாக அவனும் கடந்து வந்தாயிற்று. ஆனால் மேலே போகத்தான் முடியவில்லை. அட்வான்ஸ் ஆசைகள் தாம் அவனை அழுத்தி விட்டன. வண்டி அடையாற்றைக் கடந்து கொண்டிருந்தது. கடல் வரை விரிந்த ஆறும், தொங்கும் மேகங்களின் கரிய வெண்மையும், வானின் மாபெரும் வட்டமும் நீலமும், கண்ணையும் நெஞ்சையும் கவர்ந்து நிறுத்தின. அந்த அழகின் தூய்மையில் மனத்துள் ஒரு குரல் புலம்பிற்று,

"என்ன சொல்றீங்க?"

"ஒன்றும் வேண்டாம் ஸார். நான் கேட்டது ஒன்று, நீங்கள் தருவது இன்னொன்று என்னுடைய ஆசையை அழித்துக் கொள்ளவும் முடிய வில்லை உங்கள் வேண்டுகோளை ஏற்கவும் முடியவில்லை. ஆனால் ஒன்று உங்களிடமே இப்படி சான்ஸ் கிடைத்த பிறகு வேறு யாரிடமும் எனக்குத் தெம்பு ஊட்டும் சொல் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை."

"வருத்தப் படாதீங்க மிஸ்டர் சுந்தரம் என்று அவர் அவன் கை

## ஏசு பேசிய மொழி

"செமிட்டிக்" என்ற மொழிக்கூட்டத்தினுள் ஒன்றான அரமிக், என்பதே ஏசு பேசிய மொழி. இம்மொழி கேட்க இனிமையாக இருக்காது; நல்ல வளர்ச்சியடைந்த மொழியுமல்ல. எல்லா விதத்திலும் எளிமையை கைக்கொண்டவர். பேசிய மொழியும் எளியதாக இருந்தது விந்தையே!

www.thamizham.net - Free E Books No TM 14720

## சீட்டாடும் இயந்திரம்

"நீங்களும் உங்கள் உலகமும்" என்ற தலைப்பில் ஹம்பர்க் நகரில் நடைபெற்ற கண் காட்சியில் அனைவரது கனவத்தையும் கவர்ந்தவை, சீட்டு விளையாட்டின் போது "ஒரு கை" குறைகிறது என்ற கவலை இல்லாமல், கூட விளையாடும் கம்பியூட்டரும், குழந்தை லேசாக முனகினாலும் உடனடியாகத் தொட்டிலை ஆட்டிவிடுகிற இயந்திரமும் ஆகும்

யை எடுத்துக் கொண்டார். நீங்க எனக்கு அண்ணன் மாதிரி. ஆனால் இந்தத் துறையில் உங்களை விட எனக்குத் தான் அனுபவம் அதிகம் நீங்க சிரமப்பட்டு சம்பாதித்ததை அனுவசியமாக இழந்து போய் விடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் தான் சொல்லுகிறேன். வளமான கற்பனை அரியகருத்துக்கள், தூய்மையான நடிப்பு கலப்பில்லாத சங்கீதம், இவைகளுக்கு இன்று நம்முடைய படங்களில் இடம் இல்லை. இன்றைய நிலையைத்தான் சொன்னேன். எதிர்காலத்தில் உங்களுக்கு ஆதரவு உருவாகலாம் அது வரை பொறுமையாக இருங்கள். இன்று நீங்கள் பிழைக்க வேண்டுமானால் சம்பாதிக்க வேண்டும். நான் சொல்லிக் கொண்டு வந்தவைகளுக்குத்தான் மார்க்கெட்'!

கார் ஸ்டுடியோவரை வந்துவிட்டது வண்டியை வெளியிலேயே நிறுத்தி அவன் இறங்கிக் கொண்டான். கதவைத் திறந்து உட்கார்ந்து சுந்தரத்திற்கு ஒரு சிரிப்புடன் கூழைக்கும்பிடு ஒன்று போட்டார் சந்தானம். பதிலுக்கு கையை குவித்து விட்டு நின்றான் சுந்தரம்.

யோசித்த படி டாக்ஸிகள் நிற்குமிடத்தை நோக்கி நடந்தான். இரண்டொன்று இருக்கும், டிரைவர் உள்ளே படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பார். எழுப்பி மேலே ஒரு ரூபாய் கூடுதலாகக் கொடுப்பதாக சொல்லி அழைத்துக் கொண்டு போக வேண்டும். எங்கே? வீட்டுக்குத்தான், வேறு எங்கே?

நெஞ்சில் ஏதோ அரித்தது. மறுபடி மறுபடி அந்தச் சொற்கள் அவன் மனதில் மிதந்து வந்தன. சந்தானத்தின் உருவம் நிழலாடிற்று வாங்கோலத்தில் ஒரு ஜிப்பா மாநிறத்திற்கும் குறைவு வகிடில்லாத பின்னேக்கிய கிராப்பு. அகன்ற மூக்கு கையில் தோற்பை அது பாடம் செய்த பக்குவ படுத்திய தோல் இங்கே தொழில் செய்ய வந்த எல்லோருக்குமே, மனமும் சுண்ணும்பிலும் திராவத்திலும் பக்குவமான தோலை போன்றது தான். ஒரு முறைபெருமூச்சு விட்டான். அங்கே அவனுக்கு இடம் இல்லை அவனுடைய கருத்துக்களும் இருக்க விருப்பினால் நிச்சயம் இடம் இல்லை. ஆனால் இங்கிருந்து எங்கே போவது. எங்கிருந்தோ இங்கே வந்து சேர்ந்தது இந்த நிலைக்காகவா?

மனப்புலம்பல் தெளிந்து விட்டது. மறுபடி டாக்ஸிகள் நிற்கும் இடத்தை நோக்கி நடந்தான்.

(அடுத்த இதழில் முடியும்)

www.thamizham.net - Free E Books No TM 14720

# புகை பிடிப்பதனால்

## விளையும் நன்மைகள்

உல்லாச யுவன் ஒருவன் தாடி நரைத்த பெரியவர் ஒருவரிடம் ஆலோசனை கேட்டான். "மாமா, நான் புகை பிடிக்கக் கற்றுக் கொள்கிறேன். அது நல்லது தானா? நன்மை அளிப்பது தானா?" என்று கேட்டான்.

"புகை பிடிப்பது மூன்று காரணங்களினால் நல்லது ஆகும்" என்று கூறி, அந்த ஞானி விளக்கலானார். "முதலாவதாக புகை பிடிக்கிறவன் முதுமை அடையவே மாட்டான்..."

"அது எப்படி?"

"ஏனென்றால் புகை பிடிக்கிறவன் முதியவனாவதற்கு உரிய வாய்ப்பைப் பெறுவதே இல்லை. அவன் ரொம்ப இளமையிலேயே செத்துப் போவான். இரண்டாவதாக அவன் வீட்டில் களவு நடக்கவே நடக்காது......"

"ஏன்?"

"ஏனென்றால் புகை பிடிக்கிறவன் இரவு பூராவும் தன் படுக்கையில் உருண்டு புரண்டு, சத்தமிட்டு இருமியபடி கிடக்கிறான். அவன் இருமுவதைக் கேட்டு திருடர்கள் அவன் வீட்டைத் தாண்டி அப்பால் போய் விடுகிறார்கள். புகை பிடிக்கிறவன் நாயினால் கடிபடவே மாட்டான்."

"ஏன்?"

"ஏனென்றால் புகை பிடிக்கிறவன் சீக்கிரமே முடமாகி விடுகிறான். கையில் தடி பிடித்தபடி நடக்கிறான். நாய்களுக்கு தடிகள் மீது பிரியம் கிடையாது, மகனே."

# அநாதை அழுதால்

நா. சி. அனந்த பத்மநாபன்

குழவி அழுதால் ஈன்றெடுத்த
தாய் ஆற்றுவாள் தாலாட்டி;
தாய் அழுதால் கண்ணீரைத்
துடைத் தாற்றுமாம் குழந்தை;
இல்லாள் அழுதால் பொருள்
கொடுத் தாற்றுவான கணவன்;
கணவன் அழுதால் இன்முகம்
காட்டி யாற்றுவாளாம் மனையாள்;
பாட்டி அழுதால் பாட்டன்
பாட்டன் அழுதால் பாட்டி
முறை மாற்றி ஆற்றுவாராம்
முகம் களிப்பில் ஆழுமாம்;
காதலர் அழுதால் கவின்
கூறித் தழுவும் தென்றல்;
ஞானி அழமாட்டான்! அழுதால்?
அருள் தந்தாற்றுவான்
ஆண்டவன்; ஆனால்
அநாதை அழுதால் ஆற்ற
ஆளில்லை—
ஆற்ற ஆளில்லாமல் அழுகிறேன்
நித்தமும்.

www.thamizham.net - Free E Books No TM 14720

# பாரி முனையிலே ஒரு மனிதர்

நன்பகல்! நேரம் 12-15. பாரி முனையின் மூலையிலே அமைந்துள்ள பாரி நிறுவனத்தின் 5-வது மாடிக்கு சென்று, அங்குள்ள அழகிய கதவை தள்ளிஉள்ளே நுழைந்து வரவேற்பாளரிடம்- "நாங்கள் பாரிநிறுவனத்தின் டைரக்டர் திரு. எச். வி. ஆர். அய்யங்காரைப் பார்க்க வந்திருக்கிறோம்..." என்கிறோம்.

"மணியைப் பாருங்கள்! இப்போது மணி பன்னிரெண்டா? கால் மணி நேரம் தாமதித்து வந்திருக்கிறீர்கள் உங்களுக்கு வரச் சொல்லி குறிப்பிட்ட நேரம் சரியாக 12 மணி"

"மன்னிக்கவும். நாங்களெல்லாம் மாணவர்கள் கல்லூரியில் விடுமுறை கேட்டுக்கொண்டு வருவதற்குள்..."

"போகட்டும் உடனே உள்ளே செல்லுங்கள். அய்யங்கார் தாமதித்து வருவதை விரும்புவதில்லை இன்னும் 10 நிமிடங்களே உங்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன. சீக்கிரம்..." என்று திரு. எச். வி. ஆர். அய்யங்கார் அவர்களின் அறையைக் காட்டுகிறார் அந்த பெண்.

"மிக்க நன்றி" என்றபடி அறையை நோக்கி செல்கிறோம்.

உள்ளே சென்றால் மீண்டும் எழுந்திருக்கத் தோன்றாத அளவுக்கு அழகிய அறை! எங்களை அய்யங்கார் அமரச் சொல்கிறார். அவர் எதுவும் பேசுமுன் முந்திக் கொண்டு "மிகவும் மன்னிக்க வேண்டும் காலதாமதமாகி விட்டது" என்கிறோம். அவர் புன்னகைக்கிறார். அவர் கோபப்படவில்லை என்ற திருப்தியில் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பேட்டி காண வந்த விஷயத்தையும் விளக்கி கேள்விகளைத் தொடங்குகிறோம்.

'நீங்களும் கல்லூரி மாணவராய் இருந்திருக்கிறீர்கள் அல்லவா?

உங்கள் கல்லூரி வாழ்க்கை பற்றி சொல்லுங்களேன்...?"

"நான் பழைய தலைமுறையைச் சேர்ந்தவன். பெங்களூரில் உள்ள சிறந்த கல்லூரியில் பி.எஸ்ஸி படித்தேன். [இவர் படித்த கல்லூரியில் தான் ராஜாஜி சர் சி வி ராமன் அகியோர் படித்தனராம்] இப்போதிருக்கும் கல்லூரி சூழலுக்கும் அப்போதிருந்ததற்கும் பெரிய வித்தியாசங்கள்..."



www.thamizham.net - Free E Books No TM 14720

"அப்போதெல்லாம் மாணவர்கள் "ஸ்டிரைக்" எதுவும் செய்யாமல் அமைதியாக இருந்தார்களா?"

"அப்படி சொல்லவில்லை அப்போதும் நாங்களெல்லாம் போராட்டங்கள் நடத்தியிருக்கிறோம். ஆனால் ஒரு பெரியவித்தியாசம்- நாங்கள் பொது சொத்திற்கு எதுவும் அழிவு ஏற்படுத்தவில்லை பஸ்களை, ரயில்களைக் கொளுத்தவில்லை. சுதேசி இயக்கத்தின் போது ஒரு போராட்டம் நடத்தினோம். எல்லாம் எங்களுடைய சொந்த அயல் நாட்டுப் பெருட்களை மட்டுமே கொளுத்தினோம். எங்கள் கல்லூரி முதல்வரும் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை"

" ! அப்படியா "

"போராட்டம் நடத்திக் கொண்டிருந்த போது போலிசார் கல்லூரிக்கு வந்தனர் ஆனால் முதல்வர் அவர்களை உள்ளே விடவில்லை. 'என் மாணவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போகலாம்' என்று சொல்லிவிட்டார்"

"அப்போது மாணவர்- ஆசிரியர் உறவு எப்படி இருந்தது?"

"நாங்கள் ஆசிரியர்களுக்கு அதிக பயமும் மதிப்பும் வைத்திருந்தோம். ஆசிரியர்களும் மிகச் சிறந்தவர்களாக இருந்தனர். இப்போது ஆசிரியர்களின் தரமும் முன்பு போல இல்லை என்று தோன்றுகிறது. படித்தவுடன் அனுபவமின்றி ஆசிரியர்களாகிவிடுகிறார்கள்."

"கல்லூரி வாழ்வில் நீங்கள் நினைவில் வைத்திருக்கும் பயனுள்ள அனுபவங்கள் ஏதாவது சொல்ல முடியுமா?"

"என் கல்லூரி முதல்வர் மறக்க முடியாதவர். நாங்கள் பயமும், அன்பும் வைத்திருந்த அந்த ஐரோப்பியர் எங்களைத் தன் பிள்ளைகளாக எண்ணிப் போற்றி வந்தார். கல்லூரி விருந்து ஒன்று நடந்த போது எங்களுடன் அமர்ந்து சாப்பிட்ட காட்சி இன்னும் நினைவில் இருக்கிறது"

"தற்போதைய மாணவருலகம் சீர் பெற என்ன செய்யலாம் என்பது பற்றி தங்கள் கருத்து என்ன?"

"ஒரு வியாதிக்கு ஒரு மருந்து கொடுத்து குணப்படுத்துவது போல இல்லை இந்தப் பிரச்சினை. பல நிலைகளிலும், பலவும் திருந்த வேண்டும் மாணவர்களை குறை சொல்லிப் பயனில்லை. ஆசிரியர்கள் மாற வேண்டும். சமுதாயச்சூழல் மாற வேண்டும். அரசியல் வாதிகள் நிறையக் கெடுதிகளை மாணவர்களுக்கு செய்து விட்டார்கள் "

பேசிக் கொண்டிருந்த போது தொலைபேசி ஒலிக்கிறது அடுத்து வரவேண்டியவர் காத்திருக்கிறார் என்ற தகவல் அறிவிக்கப்படுகிறது.

புரிந்து கொள்கிறோம்.

"உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. மாணவர்களால் நடத்தப்படும் 'பூச்செண்டு' பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?"

"நான் இன்னும் இதை முழுவதும் படித்துப் பார்க்கவில்லையென்றாலும் கட்டாயமாகப் போற்றப் படவேண்டிய மாணவர் முயற்சி இது. எனது வாழ்த்துக்கள் நிச்சயம் உண்டு. சிறந்து வளருங்கள்" என்று அன்புடன் விடையளித்தார்.

பத்து நிமிடங்களில் எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மனிதரைப் பற்றிய நினைவுகளுடன் விடை பெற்றோம்.

—O—

www.thamizham.net - Free E Books No TM 14720

# அட்டை சொல்லும் கவிதை

[கூவமாற்றின் கரையில் சென்னை இராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே எடுக்கப்பட்ட இயற்கையான காட்சி]

கூவத்தின் கரையோரம் கோலமயில் இல்லை!
மேவுகின்ற மேட்டினிலே மேனிகுளிர்ந் தாடிடவே
காவிருந்து வீசுகின்ற கடிமுல்லைக் காற்றும்
பாவிரித்து ஆடவில்லை; ஆனால் ஆங்கே
வீசுகின்ற பெருங்காற்றாய் விளங்கும்(இந்) நாளில்
மாசழிந்த உள்ளத்தோடு மனமகிழ்ந்த வெள்ளாடு
தூசழிந்த மேனியுடைத் தன்மகவை யருகிருத்தி
பேசுகின்ற பேச்சுக்களைக் கற்பனையால் செவிமடுத்தேன்!
கூசுகின்ற மக்கள்நடைக் குவலயத்தில் உள்ளதென்றால்
நீள்கடலின் அலைகளென நினைவலைகள் அதனிடத்தே
சூளெடுத்த நற்குறிப்புக் கண்டு வந்தேன்!
எங்கெங்கோ பெருமைபல பேசிவரு வரையெல்லாம்
அங்கங்கே பதிக்கின்றார் புகைப்படக் கோணத்தில்
உண்மைக்கு ஒளியாக விளங்கிடும்
வண்மைமிகு இவ்வுயிரை நான்பதித்தேன் மகிழுடனே!

—படமும் அனுபவமும்: 'சினித்' யோகானந்


**மாணவர் தமிழ் உரை**

**புகுமுக வகுப்பு**
**பட்ட வகுப்பு B.A., Sc.,** } **1970**

பேராசிரியர் ரா. சீனிவாசன். எம். ஏ., எம்.லிட்

கருத்துச் செறிவும் தூய நடையும் நயங்களும் அமைந்து செய்யுளுடன் விளக்கவுரை, வினு-விடை, உரை நடை, துணைப் பாடக் கட்டுரைகள் அடங்கியது.

**அணியகம், சென்னை-30**


www.thamizham.net - Free E Books No TM 14720



## என் அருமை மாணவ நண்பர்களே உங்களுக்கோர் அறிவிப்பும் எச்சரிக்கையும்



Dr. S. R. சிவராஜ் R.I.M.P.

Dr. R. S. சிவகுமார் R I.M.P

### சோர்வடைந்த வாழ்க்கை–வளம்பெற்றுப்பொங்கும் இன்பம்




வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட உங்களின், சகலவிதமான குறைகளுக்கும் விளக்கம், ஆலோசனை வேண்டுபவர் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்க-

**சிவராஜ் சித்தவைத்யசாலை, சிவதாபுரம். S.O.சேலம், Phone:5742.**

www.thamizham.net - Free E Books No TM 14720

# பூச்செண்டு சிறுகதைப் போட்டி

வாசக அன்பர்களே!

காலத்தின் சுழற்சியில் பீடு நடை பயிலும் 'பூச்செண்டு', மாணவர்களது எழுத்தாற்றலுக்கு புத்துணர்வு அளித்து ஊக்குவிக்கும் பணியாக சிறுகதைப் போட்டியொன்றினை நடத்த எண்ணியுள்ளது. எழுத்தாற்றல் மிக்க மாணவர்கள் இதனை நன்கு பயன்படுத்த வேண்டுகிறோம்.

விதிகள் ( ) சமூகம், வரலாறு போன்ற எந்தக் கருத்தையும் மையமாக வைத்து கதைப் பின்னப்படலாம். ஆனால் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்.

( ) பூச்செண்டில் ஐந்து பக்கத்திற்கு அதிகமாகா வண்ணம் எழுத வேண்டும்.

சேர வேண்டிய கடைசி நாள் : **15—12—1969**

வரிசையான மூன்று பரிசுகள் உண்டு. பரிசளிக்கப்படாத சிறந்த கதைகளும் ஆறுதலாக வெளியிடப்படலாம். போட்டி முடிவு பொங்கல் மலரில் அறிவிக்கப்படும்.

பரிசு விபரம், பிற விபரங்களுக்கு
டிசம்பர் இதழ் பாருங்கள்

---

இதுவரை ஆர்வமுடன் படித்து வந்த ஈ. எஸ். மெர்வின் அவர்களது 'வாழ்வியல் கட்டுரைகள்' விரைவில் முழு நூலாக வருகின்றது. விபரம் அடுத்த இதழில்.

---

Special reduced rates for STUDENTS and educators for TIME and LIFE subscriptions. Don't Lose the opportunity.

For details Please write to :

K. RAMALINGAM (B. Sc.)
*Madras University Student,*
*representative for 'Time' and 'Life'*
27, VANIAR STRET,
ERODE. CBE. DT.
TAMILNAD

www.thamizham.net - Free E Books No TM 14720

# இரு

ாலச்சந்தர்—

ஒரு அருமையான கதாசிரியர்.

ஒரு திறமையான டைரக்டர்.

ஆனால் ஒரு நடிகரும் கூட!?

பின்னே! அருமையான குடும்ப சித்திரத்தை எவ்வளவு எளிமையாக விவரித்துக் கொண்டு வருகிறாரே என்று படத்தில் ஒன்றிப் போய் இருக்கும் நம்மை— நானும் மற்றவர்களைப் போல் தான்— என்று கதையின் போக்கையே மாற்றி சப்பென்று ஆக்கி விட்டாரே!

சௌகார் ஜானகிக்கு கலெக்டரின் கம்பீரத்தையும் வாழ்ந்துடிக்கும் மனைவியின் தவிப்பையும் கொடுத்து, உயிரூட்டி, ஜெமினியுடன் பைலையும் லைப்பையும் கலந்து நம்மை அசரவைத்தவர்.

குடும்பப் பெண்ணாக ஜெயந்தியை மின்ன விட்டு தன் உள்ளத்தின் குமுறலை, குழந்தைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டும் போது வார்த்தைகளாக கொட்டும் படி செய்து, சிரிப்பையும் கலக்கத்தையும் வரவழைத்தவர்.

வி. எஸ். ராகவன் போன்ற நம்ப முடியாத குணசித்திரத்தையும் படைத்து உலாவ விட்டு குழந்தைகள் தண்ணீரில் மூழ்க, அவர் பார்த்துக் கொண்டிருக்கும் வேதனையை வேடிக்கையாக்கி விட்டு, ஜானகிக்கு காயம் பட வேண்டும் என்றே துப்பாக்கிச் சண்டையை, ஒரு ஸ்டன்டாக்கி நம்மை சோதித்து நம்மை எல்லாம் ஏமாற்ற நடித்து இருப்பாரா?

ஒரு கோட்டை அழகாக உருவாக்கிய பாலசந்தர் மறு கோட்டில் கோட்டை விட்டு விட்டாரே!

'ரீத்தா'

பதிப்பாளரும் ஆசிரியரும் : சு. இராசேந்திரன், எம். ஏ. 19, நௌரோசி வீதி சென்னை-31. அச்சிடுபவர் : பி. வி. ராமச்சந்திரன், ஸ்ரீ பண்டாரி பிரஸ் 26, பிராட்வே, சென்னை - 1.

www.thamizham.net - Free E Books No TM 14720

# Sakthi Sugars Limited

Manufacturers of

HIGH QUALITY WHITE CRYSTAL SUGAR

AND

PRODUCERS OF "SAKTHI" HYBRID SORGHUM, MAIZE AND BAJRA SEEDS.

*Regd. Office :*

72, SENGUPTA STREET,

Ramnagar, Coimbatore-9

*Factory :*

SAKTHINAGAR P.O.


Erode Rms

*Managing Agents :*


M/s. BHAVANI ENTERPRISES

*POLLACHI*


www.thamizham.net - Free E Books No TM 14720




www.thamizham.net - Free E Books No TM 14720




www.thamizham.net - Free E Books No TM 14720

GIVE US THE PLEASURE OF SERVING YOU
THE LARGEST AND MOST
COMPREHENSIVE RANGE OF
DIESEL PARTS UNDER ONE ROOF ! ! !

Service Department:
Fuel Injection: Calibration of Fuel Injection pumps reconditioning of injectors
Electrical: Electrical Starters, Dynamos, Magnetos and rewinding of Motors
Mechanical Servicing of Indu
Engineering: Strial Plant and Equipment

Manufacturing Lines:
"DVD" Fuel Injection Pipes
"DVD" Garbon Brushes
"DVD" Field Coils
"DVD" Governor Diaphragam.
"DVD" Nozzle Testers
"DVD" . Fuel Injection Components

AGENTS
"PIONEER" 'O' RINGS, Oils Seals & synthetic Packings
(A FENNER COCKILL PRODUCT)

**The Indian Engineering & Trading Company**
(ESTABLISHED 1949)
*15, WALLERS ROAD, MADRAS*

TELEPHONE: 88761/88762
TELEGRAM: FUELPUMP

FACTORY:
VYASARPADI

BRANCHES:
BANGALORE
HYDERABAD

www.thamizham.net - Free E Books No TM 14720

# இனிய வாசக அன்பர்களே...

முகத்தில் வியப்பையும் நெஞ்சத்தில் நிறைவின்மையையும் கொண்டு நீங்கள் பூச்செண்டை ஏந்தி நிற்கும் கோலத்தை எங்களால் நெஞ்சார உணர முடிகிறது. பூச்செண்டின் இந்த பத்தொன்பதாவது வெளியீட்டை இந்த அளவுக்கு சுருக்க நேரிடும் என்பதனை நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை.

இந்நிலை ஏற்பட்டதற்கான காரணத்தை உங்களில் பலரால் ஊகிக்க முடியும்! இரத்தின சுருக்கமாகக் கூற வேண்டுமானால்—' பொருளாதார பிரச்சினை'' தான் சென்ற திங்கள் வெளியிட்ட விளம்பரங்களில் பலவற்றிற்கு காலத்தில் தொகை வராத காரணமே முதன்மையானதாகும்!

உங்களுக்குத் தெரியும்—உங்கள் பூச்செண்டு மிகப் பெரிய பொருளாதார அடித்தளத்தில் உருவாக்கப்பட்டதல்ல. ஒவ்வொரு திங்களும் பெறும் விளம்பரங்களும், சந்தாத் தொகையும் கொண்டு வரும் பொருளாதாரத்தைக் கொண்டே ஒவ்வொரு இதழும் பெரு மூச்சுடன் வெளியாகின்றது.

மிகப் பெரிய மூலதானத்துடன் தொடங்கப்பட்டு இச்சை, பச்சைகளைக் கலந்து வெறும் காகித வணிகமாக நடத்தப்பட்டு வரும் இதழ்கள் மலிந்துள்ள இன்றைய பத்திரிகை உலகில், பூச்செண்டு பெரும் வியப்புடன் பார்க்கப்பட்டு வருகிறது. மேலும் பத்திரிகை நடத்துவது எங்கள் முழுநேர வேலை அல்ல. கல்லூரியில் பயின்று கொண்டு எஞ்சியிருக்கும் மணித்துளிகளை ஒன்று குவித்து நல்கும் உழைப்பால் உருவாக்கப்படுகின்றது பூச்செண்டு. இது எவ்வளவு பெரிய முயற்சி என்று நாங்களே பாராட்டிக்கொள்ள விரும்பவில்லை. நீங்கள் எங்களைப் பாராட்டுவதையும் எதிர்நோக்கவில்லை.

ஆனால்—

ஒன்றை நீங்கள் உணரவேண்டும்! 'என்ன' சொல்கிறார்கள் என்பதை விட 'யார்' சொல்கிறார்கள் என்று பார்க்கும் மனப்பான்மை நம் சமுதாயத்தில் பல நூறு ஆண்டுகளாகப் புதைந்து விட்ட நிலையில், செய்யப்படுகின்ற செயலை விட, செய்கின்ற நபர்களே சிறப்பாக நோக்கப்படும் நிலை இங்கு! எனவே 'மாணவர்கள் பத்திரிகை நடத்துகிறார்களாம்!' என்ற ஏதுக்கம் ஏற்படுவது இயற்கையே! ஆனால் சொல்பவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் குறைகள் சில களைந்து நீங்கள் நோக்கினால் அதுவே எங்களுக்கு உங்கள் பாராட்டை விட அதிகத் திருப்தியளிக்கும்.

www.thamizham.net - Free E Books No TM 14720

மேற் கூறிய மனப்பான்மையால், திறமை நோக்காமல் பல இதழ்களால் புறக்கணிக்கப்பட்ட மாணவர்கள் பலரின் நல்ல கதைகளும், கட்டுரைகளும் குணமறிந்து இங்கு வெளியாகி வருகின்றன. பூச்செண்டு நடத்தும் சிறு கதைப் போட்டியும் அந்த முயற்சியில் ஒன்ருகும்.

எதிர் கால நாட்டில் எந்த நம்பிக்கையையும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு வாழ்ந்து வருகின்ற மாணவர் சமுதாயம் — சென்ற தலைமுறை செய்யத்தவறிய செயல்களால் இன்று விரக்தியடைந்துள்ள இளைய தலை முறை—எதிலும் நேர்மையின்மை, குழப்பம்—அரசியல் கட்சிகள் நடத்தும் வியாபாரத்தில் சரக்கும் பொருட்களாகி அறிவின்மையின் ஆழத்திற்கே சென்று கொண்டிருக்கும் ஆயிரம் ஆயிரம் மாணவர்கள்—மலிந்து வரும் வேலையின்மை—பெருகி வரும் வறுமை—நெஞ்சு பொறுக்க முடியாத அளவுக்கு மேலிடத்தும் கீழிடத்தும் ஊழல்கள்! இவற்றிடையே நாளைய தலை முறையை உருவாக்க இருக்கும் பொறுப்பற்ற, குறிக்கோள்கள் அற்ற மாணவர் சமுதாயம்! இதனை ஏக்கத்துடன் சிந்திக்கையில் நாளைய நாடு என்ன செய்யப் போகின்றது என்பது மிகப்பெரிய கேள்விக் குறியாக எழுகின்றது. பிரச்சினைகளைப் பற்றி இன்று நாட்டில் பலர் பேசி வருகிருர்கள். சிலர் உணர்ந்தும் வருகிருர்கள். ஆனல் யார் செயல் படுவது? யார் செயலளவில் ஒன்றைத் தொடங்குவது?

இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் பான்மையில் நாளைய நாட்டை நிர்ணயிக்கும் இளைய தலைமுறையை சிந்திக்கவைக்கும் சமுதாயப் பணியாக பூச்செண்டை உருவாக்கினேம். இது எவ்வளவு கடினமான முயற்சி என்பது இதில் கால் வைத்தவுடன் தான் புலப்பட்டது ஆனல் முன் வைத்த காலை பின் வைக்காத மறத்துணிவை இறைவன் 'அளித்து விட்டான்' இந்தத் துணிவின் ஆற்றலால் சென்ற பல திங்களாக நாங்கள் நடாத்திய ஜீவ மரணப் போராட்டங்கள் எத்தனையோ!

இளைக் கவர்ச்சி, திரை ஆபாசச் செய்திகள், பெண்மையை இழிவு படுத்தும் ஒவியங்கள் இவைகள் இருந்தால் தான் பத்திரிகை ஒடமுடியும் என்று சவால் விட்டு எங்களையும் அவ்வாறு செயல்படுத்த முற்பட்டனர் சிலர் இன்றைய பெரும்பான்மைத் திரைப்படங்களைப் போல மக்களின் இழிவான உணர்வுகளைத் தூண்டி மக்களிடமிருந்து பொருள் சேர்க்கும் இவை பத்திரிகையின் பயனை நிறைவேற்றுவதில்லை. மக்கள் ஆசைப்படுவார்கள் என்ருல் மக்களுக்காக எதனையும் கொடுக்கலாம் என்ற கொள்கை வேரூன்றி விட்ட பரிதாப நிலை இன்று. இதனை மாற்றி மக்களின் ஆசைகளை வேறு புறமாகத் திருப்பி, உயர்ந்த எண்ணங்களை நோக்கி, சிறந்த கலையார்வத்தை நோக்கி திசை திருப்புவதே ஒரு நல்ல பத்திரிகை செய்ய வேண்டிய பணி. இதனையே பூச்செண்டும் செய்ய விரும்புகிறது.

இதனைச் செய்து மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஏடுகள் பல வாழ் விழந்தன என்பது உண்மையாயினும், பூச்செண்டு இதனையே புதுமுறையில், புதுக்கோணத்தில் செயல்படுத்தி வெகு விரைவில் வெற்றி காண முடியும் என்று உறுதியுடன் நம்புகிறது. இந்த நம்பிக்கையின் அடித்தளம் சிந்திக்கும் ஆற்றல் படைத்த உங்களைப் போன்ற சில அன்பர்களின் கைகளில் தான் இருக்கிறது இந்த கடுமையான சோதனையில் பூச்செண்டிற்கு

www.thamizham.net - Free E Books No TM 14720

வெற்றி கிடைத்து விட்டால், அது உயர்ந்த எண்ணங்களின் வெற்றி; பத்திரிகையுலகில் அறம் மீண்டு விட்டதற்கு அறிகுறி.

இதனையெல்லாம் மனதில் கொண்டு எப்பாடு பட்டும் வரும் பொங்க லிதழை அதிகப் பக்கங்களுடன், எங்கள் இலட்சியங்களின் எதிரொலி யுடன் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம். பூச்செண்டு இது வரை சிந்திக்க வைக்கும் ஆக்கப்பணிக்கு செய்ததை விட செய்யவேண்டியது நிறைய இருக்கின்றது நாங்கள் ஒவ்வொரு இதழிலும் செய்ய நினைப்பதில் ஒரு சிறு பகுதியையே வெளிக்கொணர முடிகின்றது. தமிழக அளவில் விரிந்துள்ள எமது செயற்குழு இன்னும் தீவிரமாக உழைத்தால் வெகு விரைவில் பூச்செண்டு தன்னிறைவடையும்.

இந்த இதழ் வெகு நாட்களாக உங்களுக்குச் சொல்ல நினைத்த செய்தி களைத் தாங்கி, வெறும் அறிவிப்புக்களுடன் பிற செய்திகளின்றி வருவதால் இதனை விலை போடாமல் வெளியிடுகிறோம். இந்த ஆண்டோடு பழையன கழியட்டும் இந்த இதழ் ஒன்றே குறைந்த பக்கங்களுடன் வெளியாகிறது. இந்நிலை தொடராது. வரவிருக்கும் புத்தாண்டு முதல் வழக்கத்தை விட அதிகப் பக்கங்களுடன், இன்னும் பயனுள்ள செய்திகளுடன். சிந்திக்க வைக்கும் கட்டுரைகளுடன் இதழ் வெளியாகும் என்று உறுதியளிக்கிறோம். அதிகமாகச் சொல்வதை விட உங்களுக்குச் செயலளவில் காட்டுவதே சிறப்பு என்ற நிலையில் நாங்கள் செய்யப்போவதைப் பற்றிய அறிவிப்பு இத்தோடு இருக்கட்டும்.

பொருளாதார நிறைவு இன்று வரை கிட்டாத நிலையில். தொடர்ந்து விளம்பரங்களுக்காகவும், சந்தாக்களுக்காகவும் போராட வேண்டிய நிலை இந்த மிக இளைய பருவத்தில், சிறிய அனுபவங்கள் அளித்த பாடத்துடன், மிகப் பெரிய இந்தச் செயலைச் செய்ய, எங்களுக்கு முன்னின்று தட்டிக் கொடுத்துத் துணை செய்ய ஆளில்லை! இந்த ஆதரவின்மையால் கொள்கை களை விட்டு அரசியலுக்கு அடிமைப்பட்டு வாழ்வதையோ. கவர்ச்சிப் பகுதிகளைப் புகுத்தி காந்தியடிகள் பத்திரிகை நடத்திய இந்த நாட்டில் மாசு கற்பிப்பதையோ நாங்கள் கனவிலும் விரும்பவில்லை.

எங்களைப் புரிந்து கொண்டு, ஏதாவதுசெய்ய வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு இருந்தால். நீங்கள் நன்கொடை அனுப்பி ஆதரவு செய்யுங் கள் என்று கேட்க எங்களுக்கு விரும்பவில்லை. ஏனெனில் வாங்குவதில் பெருமையில்லை. நாங்கள் 'கொடுப்பதையே' விரும்புகிறோம்—அறிவுப் பணிக்குக் கொடுக்கத் தலைப்பட்ட நாள் முதலாய்! நீங்கள் செய்யும் உதவி: உங்கள் நண்பர்களைப் பூச்செண்டிற்கு அறிமுகப்படுத்தி சந்தாதார ராக்குங்கள் அவர்கள் தங்கள் தோழர்களுக்கு சொல்லட்டும். இது வழியே இந்தச் சிந்தனைத் தீ நாடெங்கும். கடல் கடந்தும் பரவட்டும்! இதுவே நீங்கள் செய்யக் கூடிய பெரிய உதவியாகக் கொள்வோம்.

உங்கள் அன்பும் இந்த ஆதரவுமே எங்களது நெஞ்சங்களைச் சோர் வடையாமல் புத்துணர்வளித்துக் கொண்டிருக்கும்!

உங்களுக்கு எங்கள் கருத்தைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி

வணக்கம்.

அன்பு வேண்டும்,

**ஆசிரியர் குழு**

www.thamizham.net - Free E Books No TM 14720



என் அருமை மாணவ நண்பர்களே உங்களுக்கோர் அறிவிப்பும் எச்சரிக்கையும்



Dr. S. R. சிவராஜ் R.I.M.P.

Dr. R. S. சிவகுமார் R.I.M.P.

சோர்வடைந்த வாழ்க்கை – வளம்பெற்றுப்பொங்கும் இன்பம்




வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட உங்களின், சகலவிதமான குறைகளுக்கும் விளக்கம், ஆலோசனை வேண்டுபவர் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்க-

**சிவராஜ் சித்தவைத்யசாலை, சிவதாபுரம். S.O. சேலம், Phone:5742.**


www.thamizham.net - Free E Books No TM 14720

## செய்திகள் வாசிப்பது

# பூச்செண்டு வானொலி நிலையம்

● உலகிலேயே அமெரிக்காவில் தான் அதிக வானொலி நிலையங்கள் உள்ளன. அதாவது அங்கு மொத்தம் 5,645 வானொலி நிலையங்கள் உள்ளன உலகில் மொத்தம் 560,000,000 வானொலி பெட்டிகள் உபயோகத்திலிருப்பதாக கணக்கிட்டிருக்கிறார்கள். இதில் அமெரிக்காவில் மட்டும் 267,000,00 உபயோகத்திலிருக்கின்றன.

● உலகம் முழுவதும் நாளொன்றுக்கு சுமார் 32 கோடி தினசரி பத்திரிகைகள் வெளியாகின்றன. இங்கிலாந்திலிருந்து வெளியாகும் 'தி நியூஸ் ஆஃப் திவேர்ல்ட்' என்ற செய்தி இதழ்தான் உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் (9,000,000 பிரதிகள்) இதழாகும்.

● உலகிலேயே மிகப்பெரியசிறைச்சாலை ரஷ்யாவிலுள்ள கார்க்கோவ் சிறைச்சாலையாகும். இதில் ஒரேசமயத்தில் 40,000கைதிகளை அடைக்கலாம்

(செய்தி : ஜஹபர் சாதிக்)

● மேற்கு ஜெர்மெனியில் தொலை காட்சி நிலையத்தில் அறிவிப்பாளர்களாக பணியாற்றுபவர்களுள் அனைவரையும் விட இளையவன் ஆக்செல் கோர்ன் அவனுக்கு எட்டே வயதுதான் ஆகிறது. தட்டுத் தடங்கல் இன்றி கவர்ச்சிகரமாக பேசும் ஆற்றல் படைத்த இந்தச் சிறுவன் தொலைகாட்சி நிலையம் தயாரித்தளிக்கும் சிறுவர் நிகழ்ச்சிகளுக்கு அறிப்பாளனாகவும், விமர்சகனாகவும் பணியாற்றி வருகிறான்.

# முகப்பை அலங்கரிக்கும் ஆலயங்கள்

இனிமையின் பொலிவில் தியாகத்தின் வலிமையில் ஈகையின் சிறப்பில் ஒளிரும் ஈகைத் திருநாளம் ரம்ஜான் பெருவிழாவினைக் கொண்டாடும் இஸ்லாமியத் தோழர்களுக்கும்,

கிறித்துவின் அருளினை அவர் தம் தியாகத்தை யெண்ணி, மகிழ்ந்து கொண்டாடிடும் கிறித்துவத் தோழர்களுக்கும்,

இனிய நினைவுகளுடன் எல்லா நலன்களும் கிட்ட பூச்செண்டின் இதய வாழ்த்துக்கள் !

படத்தில்...

மசூதி : புதுக்கல்லூரி, சென்னை

சர்ச் : இலயோலா கல்லூரி, சென்னை

புகைப்படம் ; யோகானந்த்
—ஸெனித் ஸ்டுடியோ—

(சென்னை இராஜகுமாரி தியேட்டர் எதிரில்

www.thamizham.net - Free E Books No TM 14720

மூன்றே மணி நேரத்தில் தேர்வு வைத்து மாணவனை

எடைபோட்டு பட்ட மளித்தனுப்பும்

# "தேர்வு முறை ஒழியட்டும்"

தமிழகத்தின் தலைசிறந்த கல்வியாளர்கள் தொடர்ந்து எழுதப் போகும் புதிய தொடர்

# பொங்கல் மலரில்

ஆரம்பிக்கின்றது

— இன்னும் —

ஃ 'நைலான் கயிறு'' புகழ் புது நடை எழுத்தாளர் ''சுஜாதா' எழுதும் சிறு கதை

ஃ மாணவர்கள் அரசியலால் கெடுகின்றனர்! ஆபாசத் திரைகளால் பாதிக்கப் படுகின்றனர்! என்பது பூச்செண்டின் திடமான கருத்து இது பற்றி ஓர் அரசியல் வாதியுடனும், ஒரு நடிகையுடனும் காரசாரமான உரையாடல்.

ஃ மனித உருவில் நடமாடும் பேய்களைக் காண 'சோளிங்கர்' சென்ற ஆசிரியர் குழுவில் இருவரின் நிலையைப் பொருத்திருந்து தான் பாருங்களேன்!

ஃ சிறந்த ஒரு கேள்விக்கு மட்டும் மகளிர் மூவரின் பதில்

ஃ ஃ சிறுகதைப் போட்டி பரிசு முடிவுகளும், முதற் பரிசுக் கதையும் வெளியாகின்றது.

www.thamizham.net - Free E Books No TM 14720

## டிக்கெட் இல்லாமல் பயணம் செய்ய 14 வண்டிகள்

என்ற கட்டுரையின் எதிரொலியாக இரயில்வே நிர்வாகத்தினரை எமது ஆசிரியர் குழுவினர் சந்திக்க இருக்கின்றனர் அவர்கள் என்னதான் கூறப்போகிருர்களோ?

❖ காணுமிடமெல்லாம் இன்று காணும் நாட்டில் ஒரே ஊழல் மயம்! அரசினர் உடனே களைந்தெறிய சமுதாய ஊழல்களைச் சுட்டிக் காட்டும் புதிய முழக்கம் **“அரசினர் கவனத்திற்கு”**

❖ திருச்சி உறுப்பினர் திரு. இரத்தினம் அவர்கள் விளையாட்டு கரர்களை அறிமுகப்படுத்தும் **விளையாட்டு அரங்கம்**

❖ பல சோகக்கதைகளை உள்ளடக்கி செம்மாந்து நிற்கும் மத்திய சிறைச்சாலை சுவர்களுக்குள்ளே வாழும் இதயங்களின் அனுபக் கீற்றுக்களைத் தேடி, ஆசிரியர் குழுவிலிருந்து இருவர் உள்ளே சென்றுள்ளனர். வரும் வரை காத்திருங்கள்

❖ சிறந்த செற்குழு உறுப்பினர்களின் அறிமுகம்

தொழிலதிபர் வரிசையில் லூக்காஸ்-டி.வி.எஸ் நிறுவனத்தின் அதிபர் திரு. இரத்தினத்துடன் ஒரு சுவையான பேட்டி

———

இப்படியே இன்னும் பல தேனினுமினிய சுவையினைத் தாங்கிப் பொங்கல் மலர் ஜனவரித் திங்கள் முதல் வாரத்தில் வெளியாகிறது.

**அதிக பக்கங்கள்!!!** **விலை : அதிகமில்லை**

www.thamizham.net - Free E Books No TM 14720

Telegrams : "VALAIGURU" Post Box 2345 phone : { 31752 / 36046 }

**Please visit for high grade articles**

# S. SANTHOSA NADAR & SON

***1/4, EVENING BAZAAR***
**MADRAS-3.**

*Dealers in :*

**Stainless Steelwares, Aluminium, Glass**
***Enamelwares, Stoves, Hurricane Lanterns, Petromax Lanterns***
**TEA URN & PRESTIGE COOKERS**

Branches :

23, Nyniappa Naick Street, Madras-3, -37, High Road, Tirunelveli Jn.

**Factory : 68, Village Street, Tiruvottiyur, Madras-19.**

**மாணவர் தமிழ் உரை**
**புகுமுக வகுப்பு**
**பட்ட வகுப்பு B.A., B.Sc .,** } **1970**

பேராசிரியர் ரா. சீனிவாசன். எம். ஏ., எம்.லிட்

கருத்துச் செறிவும் தூய நடையும் நயங்களும் அமைந்து செய்யுளுடன் விளக்கவுரை, வினா-விடை, உரை நடை, துணைப் பாடக் கட்டுரைகள் அடங்கியது.

அணியகம், சென்னை-30

www.thamizham.net - Free E Books No TM 14720

*THE ONLY*

SYNTHETIC GEM FACTORY

In the whole of Asia.

# The Indo-Swiss Synthetic Gem Manufacturing Company Limited

11/326 Main Road, Mettupalayam
Coimbatore District

Grams :
INDO-SWISS

Phone : Office : 136
Factory : 127

Sole Distributors :

*G. S. AND COMPANY*
6, Jaffersha Street, TRICHY-8

AND

RASTHA GOPALJI

JAIPUR

www.thamizham.net - Free E Books No TM 14720

# 'பூச்செண்டு' சிறுகதைப் போட்டி

விதிகள் :

1. சமூகம், வரலாறு போன்ற எந்தக் கருத்தையும் மையமாக வைத்து கதை பின்னப் படலாம். ஆனால் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும்.

2. பூச்செண்டில் ஐந்து பக்கத்திற்கு அதிகமாகா வண்ணம் எழுத வேண்டும்.

3. மாணவர்கள் மட்டுமின்றி இளம் எழுத்தாளர்களும் இப்போட்டியில் பரிசு பெறலாம்.

4. இங்கு கிடைக்க வேண்டிய கடைசி நாள் 20—12—'69 (தள்ளி வைக்கப் பட்டுள்ளது)

வரிசையான மூன்று பரிசுகள் உண்டு.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | ரூ 50 | 00 |
| இரண்டாம் பரிசு | ரூ 25 | 00 |
| மூன்றும் பரிசு | ரூ 10 | 00 |

முதற்பரிசினை உழைப்பால் உயர்ந்த தொழிலதிபர் திரு. ஜி. உமாபதி அவர்கள் அளிக்க முன்வந்துள்ளார்.

இரண்டாம் பரிசினை ரெக்ஸ் டிரேடிங் கம்பெனி அதிபரும் கிறித்துவ இளைஞர் இயக்கத் தலைவருமான திரு பிஞ்ஞேயிர அவர்கள் வழங்க முன் வந்துள்ளார்

மூன்றும் பரிசினை ஆசிரியர் குழுவினர் வழங்குகின்றனர் கள்

*இளைய எழுத்தாளர்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள இப்போட்டியை முழுமையாக பயன் கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பதிப்பாளரும் ஆசிரியரும் : சு, இராசேந்திரன்: எம். ஏ., 19; நௌரோசி வீதி சென்னை-31: அச்சிடுபவர் : பி. வி. ராமச்சந்திரன், ஸ்ரீ பண்டாரி பிரஸ் 26. [illegible] சென்னை-1.

www.thamizham.net - Free E Books No TM 14720